பாலகாண்டம்

105





















சித்திர ராமாயணம்

பி. ஸ்ரீ.

1. கம்பன் கண்ட சித்திரசாலை

கும்பகோணத்திலுள்ள ஸ்ரீ ராமஸ்வாமி கோவிலின் உட்சுவர்களில் இராமாயணக் காட்சிகள் சித்திரிக்கப் பட்டிருக்கின்றன. அந்தக் கோவில் விஜயநகர மன்னர்களால் கட்டப்பட்டது என்றும், அந்த இராமாயணச் சித்திரங்கள் விஜயநகர மகாராஜ்ய காலத்துச் சித்திரங்கள் என்றும் சொல்லுகிறார்கள். இராமாயணக் கதை முழுவதும் 220 சித்திரங்களில் அமைக்கப் பட்டிருக்கிறது. இராமாயணச் சித்திரங்களும் சிற்பங்களும் நம் நாட்டிலே பல வேறு இடங்களிலும் அலங்கரிக்கின்றன; கடல் கடந்து போய் வெளி நாடுகளிலும் அழகு செய்திருக்கின்றன.


கும்பகோணம் கோவிலில் உள்ள சித்திரங்கள் சில நூற்றாண்டுகளுக்கு முன்னே ஒளி மழுங்கிப் போய்விட்டன. அவற்றைச் சமீப காலத்தில்தான் புதுப்பித்து வைத்திருக்கிறார்கள். பல நூற்றாண்டுகள் கழிந்தும் ஒளி குன்றாத — அழகு மங்காத — சித்திரங்களும் உண்டு; அவை நமது நாட்டிலும் காணப்படுகின்றன. எனினும் எந்தச் சித்திரமும் எப்போதும் அப்படியே பிரகாசித்துக் கொண்டிருக்கும் என்று எதிர்பார்க்க முடியுமா?

ஆனால் ஒரு சித்திரகாரன் — சுமார் 800 வருஷங்களுக்கு முன் இருந்தவன் — என்றும் அழியாத சித்திரங்கள் எழுத வேணுமென்று ஆசைப்பட்டான். அவன் அந்தச் சித்திரங்களை உண்மையில் எழுதி வைக்கவில்லை; பாடி வைத்தான்! "ஓஹோ! கவிச் சித்திரங்களோ?" என்று உடனே கேட்கத் தோன்றுகிறதல்லவா? ஆம்; அவனுடைய சித்திரங்கள் 'பாடும்' சித்திரங்கள் — 'ஆடும்' சித்திரங்கள் என்றும் சொல்லலாம். என்ன? அந்தச் சித்திரகாரன் யார்?

மேடும் குளமும்

கும்பகோணத்திலிருந்து சுமார் பதினெட்டு மைல் தூரத்திலே தேரழுந்தூர் என்ற ஒரு கிராமம் இருக்கிறது. பெரிய கிராமந்தான்; கும்ப

கோணம்போல் பிரசித்தமான ஊரன்று. அதன் சரியான பெயர் திரு அழுந்தூர் அல்லது திருவழுந்தூர்; அழுந்தை என்று தேவாரத்திலே திருஞான சம்பந்தர் பாடியிருக்கிறார். அந்த ஊரைச் சேர்ந்தவன் தான் மேலே சொன்ன சித்திரகாரன். அவ்வூரில் கம்பன் மேடு என்று ஒரு இடம் இருக்கிறது. அங்கேதான் கம்பன் வீடு இருந்தது என்கிறார்கள். ஆம்; அந்தச் சித்திரகாரன் கம்பன்தான். சரி; ஊர் தெரிந்தது, பேர் தெரிந்தது: இன்னும் ஏதாவது தெரிகிறதா?



திருவழுந்தூரில் கோயில் கொண்டிருக்கும் சிவபெருமான் விஷயமாகத் திருஞானசம்பந்தர் பாடியிருக்கும் தேவாரப் பதிகத்திலே, அது வேத கோஷம் நிரம்பிய ஊர் என்று வருணிக்கப் பட்டிருக்கிறது. கம்பன் காலத்திலே அவ்வூரில் வடமொழிப் பயிற்சியும் தமிழ் மொழிப் பயிற்சியும், வேத வேதாந்தங்களோடு கலைகளும் ஒருங்கே விளங்கின என்று கருதலாம்; சைவமும் வைஷ்ணவமும் சமரஸமாகச் சிறந்து வளர்ந்தன என்றும் ஊகிக்கலாம். திருவழுந்தூருக்கு வடக்கே சுமார் ஆறுமைல் தூரத்தில் வெண்ணெய் நல்லூர் என்ற ஊர் இருக்கிறது. அதைச் 'சடையப்ப பிள்ளை கிராமம்' என்றும் சொல்லு

இருக்கை. [illegible] சடையப்ப பிள்ளை' யென்றும் 'சடையப்ப முதலியார்' என்றும் சொல்லுகிறார்கள். அந்தக் கிராமத்திலே ஒரு குளம். அந்தக் குளத்தையும் அந்த ஊரையும் சடையப்ப வள்ளலையும் ஒருங்கே சேர்த்துச் சிறப்பித்துக் கம்பன் பாடி யிருப்பதாக ஒரு பாட்டு.


மோட்டெருமை வாவிபுக, முட்டுவரால் கன்றென்று
விட்டளவும் பால்சொரியும் வெண்ணெயே: — நாட்டில்
அடையா நெடுங்கதவும், 'அஞ்சல்!' என்ற சொல்லும்
உடையான் சரராமன் ஊர்

[மோட்டெருமை - பருத்த எருமை மாடுகள். வாவி - குளம். முட்டுவரால் - முட்டுகின்ற வரால் மீன். வெண்ணெ - வெண்ணெய் நல்லூர். அஞ்சல் என்ற சொல் - 'அஞ்சாதே' என்ற அபய வாக்கு. சரராமன் — சடையப்பனுடைய புனை பெயர்.]

எருமை மாடுகள் குளத்துத் தண்ணீரில் கிடப்பது கிராமாந்தரங்களில் இன்றும் நாம் சாதாரணமாய்க் காணும் காட்சி. அழுக்கை உண்ண வரும் மீன்கள் அந்த எருமைகளின் உடம்பிலும் மடுக்களிலும் முட்டுவதும் யாரும் பார்த்திருக்கக் கூடியதுதான். ஆனால் மூன்று அல்லது நாலு அடி வளர்ச்சியுள்ள வரால் மீன்கள் வந்து மடுக்களில் முட்டியதும் அந்த எருமைகள் கன்றை நினைத்துக் கொண்டு அங்கே யிருந்து வீடுவரையிலும் பால் சொரிந்து கொண்டே போகுமென்று கவிஞர் கற்பனை செய்யும்போது, அவ்வூரின் பால் வளத்தை — பஞ்சத்தை அறியாத அவ்வூரின் உணவு வளத்தை — நாமும் மனக் கண்ணால் ஒருவாறு பார்க்க முடிகிறது. ஆம்; பொருள் என்பதே ஸாராம்சத்தில் உணவுப் பொருள்தானே? "பால் சொரியும் வெண்ணெயே" என்று அந்த வளம் தான் எவ்வளவு சமத்காரமாய்க் குறிக்கப் படுகிறது!

இத்தகைய பொருட் செல்வத்திலே சிறந்தவனா யிருந்த சடையப்பன் அவ்வளவு பொருளையும் பிறருக்கே பயன் படுத்தி வந்தான். அந்த வீட்டுக் கதவை அடைத்துவைப்பதே யில்லையாம். பூட்டும் திறவுகோலும் உண்டோ? — என்பதே சந்தேகம்தான்! "உள்ளே போகலாமோ?" என்று அன்னியர் சங்கோசப்பட்டால், "அஞ்சாதே!" என்ற அபய வாக்குடன் ஓடி வந்து வரவேற்று உபசரிப்பார்களாம் வீட்டில் உள்ளவர்கள்.

இப்பேர்ப்பட்ட சடையப்ப வள்ளல், இந்தப் பாட்டிலே சரராமன் என்ற பெயரால் குறிக்கப்படுகிறான். 'சரராமன்' என்றால், அம்புகளோடு கூடிய இராமன், வீரராமன். இராமபிரானுடையவீரத்திருக் கதையிலே இதயத்தைப் பறிகொடுத்த - சடையப்பனுக்குச் 'சரராமன்' என்ற ஒரு புனை பெயரும் இருந்தது.



கம்பனும் சடையப்பனுமாகிய இரண்டு நண்பர்களும் இளமையிலேயே இராம கதையில் ஈடுபட்டிருக்க வேண்டும். சடையப்பனுடைய அரண்மனை போன்ற மாளிகையிலே அடிக்கடி வால்மீகி ராமாயண காலட்சேபங்கள் நடைபெற்றிருக்கும் என்று ஊகம் செய்யலாம். அந்தக் காலட்சேபங்களைக் கேட்டுக் கேட்டுக் கம்பன் இராம சரித்திரத்தில் ஆழ்ந்த ராமபக்தனானதுடன், வால்மீகியின் கவிதை யழகிலும் மூழ்கி மோகித்துப் போயிருக்கவேண்டும். அந்தக் கவி யின்பத்தை உள்ளத்திலும், அந்த இசை வெள்ளத்தைச் செவிகளிலும் தேக்கிக் கொண்டான் என்றே சொல்ல வேண்டும். அந்தக் கதையும் கவிதையும் பக்தியும் கம்பனை வெறி கொள்ளச் செய்து, இந்த மண்ணுலகத்திலேயே லட்சிய பூமியாகிய ஒரு பொன்னுலகத்தையும் காணும்படி செய்துவிட்டன. இதனால்தான் கம்பன் சொல்லுகிறான்:

வாங்கரும் பாதம் நான்கும்
　　வகுத்தவான் மீகி என்பான்,
தீங்கவி செவிகள் ஆரத்
　　தேவரும் பருகச் செய்தான்!
ஆங்கவன் புகழ்ந்த நாட்டை,
　　அன்பெனும் நறவம் மாந்தி
மூங்கையான் பேசலுற்றான்
　　என்ன,யான் மொழிய லுற்றேன்.

[வாங்கரும் — (ஒன்றை) எடுத்து விட்டு (மற்றொன்று) போட முடியாத. பாதம் — (சுலோகங்களின்) அடி. தீங்கவி — இனிய கவிகள். ஆர — நிரம்பும்படி. ஆங்கவன் — ஆங்கு அவன். நறவம் — கள். மாந்தி — குடித்து. மூங்கையான் - ஊமையன். பேசலுற்றான் - பேசத் தொடங்கினான்.]

வால்மீகியின் நாலு பாதங்களோடு கூடிய சுலோகங்களைக் கம்பன் எப்படி அனுபவித்திருக்கிறான், பாருங்கள்! "ஆஹா! இந்தச் சுலோகத்திலே ஒரு பாதத்தை எடுத்து விட்டு வேறு ஒரு பாதம் செய்து சேர்க்க முடியுமா? வேறு எந்தக் கவிஞனாவது அப்படிச் செய்து வைத்தால் அது பொருந்தி அமைகிறதா? பொன்னோடு 'காக்கைப்பொன்னை'ப் பொருத்தி வைப்பது போலத் தானே யிருக்கிறது!" என்று வியந்து வியந்து அனுபவித்திருக்கிறான். வால்மீகியின் ஸ்வச்சமான கவியைக் கம்பன் கேட்டுக் கேட்டு அனுபவித்ததோடு, தானே பாடிப் பாடி ரஸித்த வண்ணமா யிருந்தான் என்றும் கருதவேண்டும்.

நாலு பாதங்களோடு மண்ணிலும் விண்ணிலும், புற உலகிலும் அக உலகிலும் உலாவித் திரிந்த வால்மீகி - சுலோகங்களைப் போல், தானும் தமிழிலே நாலு பாதங்களோடு கூடிய விருத்தப் பாடல்கள் செய்ய விரும்பினான். முனிவர் பாடிப் புகழ்ந்த ராம ராஜ்யத்தைத் தானும் அத்தகைய அற்புதக் கவிதையால் பாடிப் புகழ ஆசைப்பட்டான். வால்மீகியைக் கம்பன் ரஸித்தது போலவே, இன்றும் ரஸிகர்கள் கம்பனை — ஸ்வச்சமான கம்பனை — ரஸிக்கிறார்கள். "இந்தக் கம்ப ராமாயணப் பாட்டிலே ஒரு அடியை எடுத்துவிட்டு வேறொரு அடி செய்து ஒட்ட வைக்க முடியுமா? அது நடக்கிற காரியமா?" என்றெல்லாம் வியந்து வியந்து பாராட்டுகிறார்களல்லவா? இவ்வளவு ரஞ்சகமாய்க் கம்பன் விருத்தம் பாடுவதற்கு அந்த ஆதிகவியின் சுலோகங்கள் ஒரு முக்கிய 'வழிகாட்டி'யாக இருந்திருக்க வேண்டும்.

சில சமயங்களில், கம்பன் அந்தச் சுலோகங்களின் பொருளைக் கூடப் புற மனத்திலிருந்து ஒதுக்கி விட்டு அவற்றின் இசை வெள்ளத்தையே அனுபவித்துக் கொண்டிருப்பான். 'செவியே வாயாக'— 'செவியுள் நாவின் சுவை கொண்டு'—என்றெல்லாம் அறிஞர் வருணிக்கிறபடி, அந்தத் 'தீங்கவி'களாகிய தேவாமிர்தத்தைச் செவி நிறையப் பருகிப் பருகி அனுபவித்திருப்பான். இந்த ஸ்வானுபவம் தான், இந்த ஆனந்தம் தான்,

......வான் மீகி என்பான்
தீங்கவி செவிகள் ஆரத்
தேவரும் பருகச் செய்தான்!

என்று வாயாரப் பாடத் தூண்டியது.

"இத்தகைய மகாகவி யாகிய மகரிஷி புகழ்ந்த ராம ராஜ்யத்தை (கோசல நாட்டை) நானும் புகழ்ந்து பேசத் தொடங்குகிறேனே, ஊமை பேசத் தொடங்குவது போலே!" என்று எவ்வளவோ அடங்கிப் பேசுகிறான் கம்பன்! ஊமை பேசத் தொடங்கினால், அது கேவலம் உளறலாகத் தானே வரும்? "அப்படியானால் நீ ஏன் பேசத் தொடங்குகிறாய்?" என்ற கேள்வியும் வரக் கூடுமல்லவா? அதற்குத்தான், "அன்பு என்ற கள்ளைக் குடித்து விட்டு நான் பேசத் தொடங்கினேன்!" என்கிறான். கள்ளுக்குச் 'சொல் விளம்பி' (அதாவது, பேசச் செய்வது) என்று ஒரு பெயர். 'பேசாமடந்தை'யையும் பேச வைக்கும் அந்தச் 'சொல் விளம்பி'தான் ஊமையைப் பேச வைக்க முடியுமா?

"கள்ளைக் குடித்து விட்டு ஊமை ஒரு பிரசங்கம் செய்வதாகவே நினைத்துக் கொள்ளலாம்: அன்புக் கள்ளைக் குடித்து வந்த என்னுடைய நிலையும் அதுதான்!" என்கிறான்.

கம்பனுடைய மனக் கண், வால்மீகியின் கவிதை மூலமாக எப்பேர்ப்பட்ட காட்சிகளை யெல்லாம் பார்த்திருக்க வேண்டும்! வால்மீகியின் 'சப்த சித்திரங்'கள் மூலமாகக் கம்பன் ஒரு சித்திர சாலையைப் பார்த்து விட்டான்—என்றே சொல்ல வேண்டும். அந்தச் சித்திரசாலையிலே வால்மீகிக்குப் பின் ஏற்பட்ட இராமாயண வளர்ச்சிகளுக்கும் இடம் கொடுக்க விரும்பினான். தமிழோடு வளர்ந்த கலைப் பண்புகளுக்கும் இடம் அளித்தான். விசேஷமாக, இராமாயண பாத்திரங்களை யெல்லாம் தமிழ் நாட்டிலே தமிழருள்ளங்கள[illegible]ய கண்டு அந்தக் காட்சிகளைத் தமிழ் மயமாக்கிச் சித்திரித்தான். தான் சிருஷ்டித்த சித்திரசாலையைக் கம்பன் தமிழர்களுக்கெல்லாம் உரிமையாக்கி விட்டான்; பொது உடைமையாக்கி விட்டான்.

என்றும் வாடாத கவிச் சித்திரங்கள் நிறைந்த இந்தப் புதிய சிருஷ்டி, என்றும் புதுமை வாய்ந்த சித்திரசாலையாகவே யிருக்கிறது. இதைத்தான் கம்ப ராமாயணம் என்றும், கம்ப நாடகம் என்றும் சொல்லுகிறோம். இந்தக் கம்ப நாடகத்திலே, பிரபஞ்ச நாடகத்தை யெல்லாம் பார்க்கலாம். இந்த நாடக மேடையிலே 'ஆடும்' பாத்திரங்கள், 'பாடும்' பாத்திரங்கள் எல்லாம் இன்றும் நாம் பார்க்கக் கூடிய உயிர்ச் சித்திரங்கள்தான். இந்த உயிர்ச் சித்திரங்களில் சில, அந்த வெண்ணெய் நல்லூர்க் குளக் கரையிலே கம்பனுடைய அகக் கண்ணுக்கு இலக்காகி யிருக்கலா மல்லவா?

சித்திரசாலையாகவும் நாடக சாலையாகவும் ஒருங்கே காட்சிதரும் கம்ப ராமாயணத்தின் மூலமாகக் கவிதைப் பேரின்பத்தை அனுபவிப்பது தமிழராய்ப் பிறந்தவர்களுக்கெல்லாம் கடமையும் உரிமையும் பாக்கியமுமாகும். என்றும் அழியாத இந்தச் சித்திரசாலையை நமக்கு உதவிய சித்திரகாரனுடைய ஞாபகச் சின்னங்களாக அந்தக் குளக் கரையையும், கம்பன் மேட்டையும் கண்காணித்து வருவதும் தமிழர் கடமைதான்.



சித்திர ராமாயணம்

பி. ஸ்ரீ.

2. இரண்டு நண்பர்கள்

ஓர் அழகிய பூஞ்சோலை. அந்தச் சோலைக்கு ஆபரணம் போல் ஒரு மணி மண்டபம். அம் மண்டபத்திலே அவர்கள் என்ன செய்கிறார்கள்? ஒருவன் முகத்திலே பிரபுத்வம் தாண்டவ மாடுகிறது. மற்றவன் முகம் கவித்வ சக்தியால் ஜொலிக்கிறது. இருவரும் மௌனமாகவே யிருக்கிறார்கள்.

கவிஞனுக்கு உலக நினைவு இருப்பதாகவே தோன்றவில்லை. அவன் உள்ளம் தியான வாசலை மெள்ளத் திறந்து கொண்டு போய் இராமாயண உலகத்திலே எங்கேயோ உல்லாஸ யாத்திரை செய்து கொண்டிருக்கிறது. பக்கத்தில் நண்பன் இருப்பதும் தெரியவில்லையே!

பிரபுவோ அன்பனை நோக்கிய வண்ணம் பக்குவமாகக் காய்ச்சிய பாலை—அந்த நிலையில் வேறு உணவுதான் சரிப்படாதே—ஒரு பொற் கிண்ணத்திலே வைத்துக் கொண்டு ஆவலோடு காத்திருக்கிறான். கண்களிலே சொல்ல முடியாத ஆசை—கவிதா தாகம்...கவிஞன் மெள்ள விழித்துக் கொள்ளுகிறான், அந்த நீண்ட பகற் கனவுகளிலிருந்து. பிரபு கொஞ்சும் குரலில், "உடம்பிலே உயிர் பற்றி நிற்க வேணுமல்லவா? இந்தப் பாலைக் கொஞ்சம் பருகவேணும்" என்று தாய் போல ஊட்டப் பார்க்கிறான்.

கவிஞன் குழந்தை போல் இளநகை அரும்பி, "அன்பா! பால்தானா? இல்லை!...அமிர்தமா யிருக்கிறதே! நீயே காய்ச்சிக் கொண்டு வந்தாயோ?" என்று கேட்கிறான், பாலைப் பருகிக் கொண்டே.

அந்தப் பிரபுவைத்தான்,

பற்ற அரும்பால் அமுதளித்தும்,
　　பசைத்த வறுமைப் பயந்தீர்த்தும்,
கற்ற முதல்நூல் திருவழுந்தூர்க்
　　கம்பன் தழையக் கருணைசெய்தோர்

என்று பாராட்டுகிறது சோழமண்டல சதகம். வறுமைப் பயம் இருந்தா —அரிசிக்கும் விறகுக்கும் கம்பன் ஆலாப்பறந்து கொண்டிருந்தால், கம்ப ராமாயணம் என்ற அற்புதச் சித்திர சாலையை நாம் இன்று கண் களிக்க முடியுமா?

ஓர் அபூர்வ 'மூலிகை' கம்பன் என்ற மேதா விலாஸம். இ மூலிகைக்கு மழை வேண்டும்; ஆனால் அதிக மழையும் ஆகாது அதிக வெயிலும் கூடாது; நிழலிலும் தழையாது! அப்பேர்ப்பட்ட மூலி தழையத் தவம் கிடந்து காலம் பார்த்துக் கருணை பொழிந்த மேகம் எ கிறார் சடையப்ப வள்ளலைச் சதக ஆசிரியர்.

'தருமதேவதை'


சடையப்பனுடைய வள்ளன்மை கதை கதையாய்த் தழைத்தி கிறது. காவேரி தீரத்திலே அந்த வள்ளலுக்கு எத்தனையோ கிராமங்கள் அவ்வளவு செல்வத்திற்கும், 'தருமகர்த்தா'வாக வாழ்ந்தவனைத் 'தரு தேவதை'யாகவே ஜனங்கள் போற்றத் தொடங்கினார்கள். தமிழகத்தோ நின்று விடவில்லை அவனுடைய தருமமும் வள்ளன்மையும்.

இலங்கை என்ற சிங்களத் தீவில் கண்டி நாட்டிலே பரராஜ சிங்க ஆட்சியில் கொடிய பஞ்சம் வந்ததும், சடையப்ப வள்ளல் 'இலங்கை, தம நாடு' என்று பேதம் பாராட்டாமல், ஆயிரம் கப்பல்களில் நெல் அனுப்பி பஞ்ச நிவாரணம் செய்தானும். நன்றி மறவாத பரராஜ சிங்கன் நம வள்ளலை மனமார வாயார வாழ்த்திப் பாடியதாக ஒரு பாட்டு:

இரவு நண்பகல் ஆகிலென்? பகல்
  இருள்அறு இர(வு) ஆகிலென்?
 இரவி எண்திசை மாறிலென்? கடல்
  எழும் ஏழிலென்? வற்றிலென்?
மரபு தங்கிய, முறைமை பேணிய,
  மன்னர் போகிலென்? ஆகிலென்?
 வளமை இன்புறு சோழ மண்டல
  வாழ்க்கை காரணம் ஆகவே,
கருது செம்பொனின் அம்ப லத்தில்ஓர்
  கடவுள் நின்று நடிக்குமே!
 காவி ரித்திரு நதியி லேஒரு
  கருணை மாமுகில் துயிலுமே!
தருஉ யர்ந்திடு புதுவை யம்பதி
  தங்கு மானிய சேகரன்
 சங்க ரன்தரு சடையன் என்றொரு
  தரும தேவதை வாழவே!

[நண்பகல்—நடுப் பகல். என்—என்ன. அறு—அற்றுப் போகா இரவி — சூரியன். எழில் — எழினும்; பொங்கினால். மரபு — வம்சம். முறைமை—ராஜநீதி. செம்பொனின் அம்பலம் — பொன்ன பலம் என்ற சிதம்பரம். மாமுகில்—பெரிய கரு மேகம். தரு—மர புதுவை அம்பதி — புதுவை என்ற அழகிய ஊர். மானியம்—நிலத்தி தீர்வையை இனமாகப் பெறும் பாத்தியதை. சேகரன்—சிறந்தவன்.]

தரும தேவதையே சடையன் என்ற வடிவம் தாங்கிச் சங்கர முதலி
ாரின் தவப் புதல்வனுகப் பிறந்து விட்டதாம். "யார் இருந்தால் என்ன?
ஆ எப்படிப் போனல் என்ன? அந்தத் தரும தேவதை சோழ மண்டலத்
லே தருமப் பொறுப்பை ஏற்றுக்கொண்ட பின், நடராஜா ஸ்ரீ ரங்கராஜா
ன்ற அந்த இரண்டு பரதேவதைகளுக்குத்தான் என்ன கவலே? கவலே
ருந்தால் உறக்கம் பிடிக்குமா? அந்த ஆனந்த நடனம்தான் ஆனந்த
ாக நடைபெறு
ா?" என்றெல்
ாம் தன் இதயம்
ட்ட பாட்டை
ப்படியே காட்டு
ருன் கண்டி
ாஜா, தன் நாட்டி
ல பசிப்பிணி
பாக்கிய வள்ள
ாக்கு.
இத்தகைய 'தரும
தேவதை' கம்ப
னுக்குப் பொருளு
ணி செய்ததில்
ஆச்சரிய மில்லே.
ம்பன் தமிழையும்
படி தன்னேயே
அவனுக்கு உதவிய
அந்த அன்பும் நட்
புக் காதலும் உள்
ாபடி அதிசய
மானவை தான்.
ள்ளலும் அருங்



கலை விநோதன்; கம்பனது கவியுள்ளம் அத்தகைய ரஸிகனையே தேடித் தவித்திருக்க வேண்டும். எனவே, இருவரும் உயிர்த் துணைவராயினர்.

கம்பன் பாடிய அதே குளத்திற்கு அருகில் சடையப்பனுக்குச் சொந்தமாக ஒரு பூஞ்சோலையிருந்ததென்றும், அந்தச் சோலையிலே நண்பர்கள் இருவரும் அளவளாவிப் பொழுது போக்குவார்கள் என்றும், அங்கே ஒரு மண்டபத்திலே கம்பன் அமர்ந்து கவிதைக் கனவுகள் கண்டு கொண்டிருப்பான் என்றும் கற்பனை செய்து கொள்ளலாம்.

விருந்தும் எதிர் விருந்தும்

அந்தச் சோலையிலே நண்பர்கள் விருந்துண்டு மகிழ்வார்கள் என்றும் ஊகிக்கலாம். சடையப்பன் பாலும் தேனும் பழங்களுமாகக் கொணர்ந்து வைத்து, "இந்தத் தேனை ருசிபார்க்கவேணும்; இன்னும் கொஞ்சம் பால் சாப்பிடலாமே. இதோ வாழைப்பழம்; அதோ கொம்பிலே கனிந்த மாம்பழம்; இந்தப் பலாச் சுளைகளையும் கொஞ்சம் சுவைத்துப் பார்க்கலாம்" என்றெல்லாம் உபசரிப்பான். கம்பனும் எதிர்விருந்தாகக் கவியமுதம் பொழிந்து அன்பனை மகிழ்வித்திருப்பான். சில தினங்கள் சந்திக்கவில்லையென்றால் சடையப்பனுக்கு ஒரே ஏக்கம் பிடித்து விடும்.

கம்பனும் அந்த நட்புக் காதலில் உள்ளத்தைப் பறி கொடுத்தவன் தான். எனினும் அழகுத் தெய்வத்தின் உபாஸகன் அல்லவா? "மலைப் பிரதேசங்களைப் பார்க்கவேணும்; வட நாட்டுக்கு யாத்திரை போகவேணும்; காட்டைப் பார்க்கவேணும்; கடலைப் பார்க்கவேணும்" என்றெல்லாம் ஆசை பிறந்து விடும். அந்த 'அலைச்சல்—பைத்திய'த்திலே ஆருயிர் நண்பனையும் பிரிந்திருப்பான்.

அப்படி ஒரு சமயம் நண்பர்களுக்கு இடையே ஒரு நீண்ட காலப் பிரிவு ஏற்பட்டு விட்டதென்று ஊகிக்கலாம். இயற்கை – மோகினியின் காதலால் அங்கும் இங்குமாகத் திரிந்து கொண்டிருக்கும் போதே, வெண்ணெய் நல்லூரின் ஞாபகம் வந்து விட்டது. அந்தப் பால் - வளமும் விருந்துகளும் பேரன்பும் அப்படியே ஆகர்ஷிக்க, ஓடிவந்து விட்டான் கவிஞன்.

கம்பனைக் கண்டதும் சடையப்பன் கண்களில் நீர் பெருகியது. "என்னை மறந்து விட்டாயே! எப்படித்தான் மனம் வந்ததோ?" என்று தழுதழுத்த குரலில் கேட்டு விட்டான். அவ்வளவுதான்: கவிஞன் உள்ளமும் நீராய் உருகிப் போயிற்று. அந்த உருக்கத்திலே பிறந்த பாட்டு:

ஆன்பாலும் தேனும்
    அரம்பைமுதல் முக்கனியும்
தேம்பாய உண்டு
    தெவிட்டுமனம்,—நீம்பாய்
மறக்குமோ? வெண்ணெய்
    வருசடையா! கம்பன்
இறக்கும்போ தேனும்
    இனி!

[ஆன்பால் — பசுவின் பால். அரம்பை — வாழை. முக்கனி — வாழைப்பழம், மாம்பழம், பலாப்பழம். தேம்பாய—இனிமை பாய. நீம்பு—குறும்பு; கேடு. வெண்ணெய்—வெண்ணெய் நல்லூர்.]

"நீ அளித்த பாலும் தேனும் பழங்களும், நான் போன இடங்களில் கிடைத்த முக்கனிகளையும் தேனையும் பாலையும் போலவா இருந்தன? உண்ட உடம்பெல்லாம் தித்திக்க, உள்ளமும் தித்திக்கும்படி இங்கே நீ அன்புடன் கலந்து அளித்த விருந்துகளை மறக்க முடியுமா? கம்பன் இறக்கும்போதுதான் அந்த மறதி ஏற்படுமா?" என்று அந்தக் குழந்தையுள்ளம் உருகி அப்படியே பாட்டாக வந்து விட்டது! சடையப்பனால் அந்தப் பாட்டையும் சந்தர்ப்பத்தையும் எப்படி மறக்க முடியும்?

இப்படி யெல்லாம் பாடக் கூடிய கவித்வ சக்தி என்றும் அழியாத ஒரு சித்திரசாலையில் இடம்பெற வேண்டும் — என்று சடையப்பன் நாளடைவில் எண்ணத் தொடங்கினான். அவனுடைய மாளிகையில் வால்மீகி ராமாயண காலட்சேபங்கள் நடைபெற்ற காலங்களில் கம்பனுக்கும் அந்தச் சித்திர சாலையைத் தமிழிலே அற்புதமாய்க் காட்டிவிட வேண்டும் என்ற ஆசை ஏற்பட்டது.

கம்பன் வீட்டிலே ஒரு கல்யாணம். உற்றாரும் ஊராரும் அன்னியர்களும், எத்தனையோ பிரபுக்களும் கவிகளும் அரசர்களும் கூடியிருந்தார்களாம். காலம் தாழ்த்து வந்த சடையப்பனுக்கு மணப் பந்தலில் வசதியாக உட்கார இடமில்லை. எங்கேயோ ஒரு மூலையில் ஒதுங்கி யிருந்தானாம். அப்போது கம்பனுடைய மனைவி, "அண்ணனை அங்கேயா வைப்பது?" என்று கேட்டு விட்டாள். அது கேட்ட கம்பன், பளிச்சென்று, "வைக்கும் இடம் தெரிந்து வைப்போம்; ஏற்ற இடத்தில் ஏற்றமாக வைப்போம்!" என்று பதில் சொல்லி விட்டானாம். இதனால்தான், தன் உயிர்த் துணைவனான வள்ளலைக் கம்பன் தான் பாடிய இராமாயண காவியத்திலே பத்து இடங்களில் ஏற்றமாக வைத்துப் பாடி யிருக்கிறான் — என்கிறார்கள்.

ஏற்ற இடம் தெரிந்துதான் கம்பன் தன் கவிதையாகிய அமிர்தத்தையும் இராம கதை என்ற பொற்கிண்ணத்திலே வைத்திருக்கிறான். வைத்துத் தமிழ் மக்களை "உண்ணுங்கள், உண்ணுங்கள்" என்று உபசரித்து ஊட்டி வருகிறான், சென்ற எட்டு நூற்றாண்டுகளாக. உண்ண விரும்பியதும் நாம் கம்ப நாடகம் என்ற சித்திரப் பூங்காவனத்திலே அடியெடுத்து வைக்கிறோம். அங்கே இரண்டு நண்பர்களையும் சந்திக்கிறோம்; அவர்களோடு இராமாயண கதா பாத்திரங்களையும் சந்தித்து நண்பர்களாக்கிக் கொள்கிறோம்.



சித்திர ராமாயணம்

பி. ஸ்ரீ. ~~13~~ 7

3. ‘கம்பன் போன வழி’

கம்பன் கவியரசென்று பிரசித்தி பெற்றதும், முன் போலத் தனியே கால் நடையாகப் போவதில்லையாம். ஓர் அரசனைப்போல் ஆடம்பரமாகப் போவானும். சடையப்பன் அன்புடன் அளித்த சுவரத்தினை கண்டி கழுத்திலே. சோழன் உவந்து அளித்த வயிரக் கடுக்கன் காதிலே. வாணன் புகழ்ந்து அளித்த மோதிரங்கள் விரல் நிறைய. இப்படியெல்லாம் ‘டால்’ வீசச்* சீனம்பரம் தரித்துப் பாண்டியன் கொடுத்த தந்தப் பல்லக்கிலே யாத்திரை போவானும், — வெண்சாமரம் வீசச் சின்னம் ஊத மற்றும் பல விருதுகளுடன், பெருங்கூட்டம் தன்னைச் சூழ்ந்து வரும்படி.

இந்தக் கூட்டம் போகிற—வருகிற—வழியெல்லாம், அங்கங்கேயுள்ள சோலைகள் தோப்புகள் கொல்லைகள் கழனிகளிலிருந்து, வேண்டிய உணவுப் பொருள்களை வேண்டிய மட்டும் பெற்றுக் கொள்ளத் தடையே கிடையாதாம். அப்படிப்பட்ட நஷ்டங்களைத் தமிழ் நாட்டு மூவேந்தர்களான சேர சோழ பாண்டியர்களும், — மற்ற அரசர்களும் கூட — குடிகள் தங்களுக்குக் கொடுக்க வேண்டிய நிலவரியிலிருந்து கழித்துக் கொள்வார்களாம். “கம்பன் போன வழி கண்டு கழித்தது இவ்வளவு” என்று அதிகாரிகள் கணக்கிலே எழுதி விடுவார்களாம். இதனல் “கம்பன் போன வழி” என்பது ஒரு பழமொழியாக வழங்கத் தொடங்கியது—என்கிறார்கள்.

அப்படியெல்லாம் அன்று கம்பன் போன வழி நமக்குத் தெரியாது. ஆனல் வாழ்க்கையிலும் கவிதையிலும் “கம்பன் போன வழி”யை இன்றும் நாம் கண்டு கொள்ளலாம். அந்த வழியை மட்டுமா? கவிதை மிதக்கும் விழிகளோடு கூடிய முகத்தையும்தான்! அந்த ஆபரணங்களோடு கூடிய படாடோபக் கம்பனை அல்ல: ஆபரணங்களுக்கெல்லாம் மேலாகச் சுடர் வீசும்—மேதா விலாஸம் பொருந்திய—கம்பீரமான ஒரு முகமண்டலத்தையே பார்ப்பது போலத் தோன்றுகிறது, கம்ப ராமாயணத்திலே.

---

* சீனம்பரம் = சீனத்துப் பட்டாடை.

அது மட்டுமா? அந்த முகத்தோடு அகத்தையும் பார்க்கிறோம், பாராத ஒரு சமுத்திரத்தைப் பார்ப்பதுபோலே! அந்த அகத்திலே ஒரு ஆசை—ஆஹா!—பேராசையாக ஜொலித்துக் கொண்டிருப்பதையும் பார்த்து விடுகிறோம். கம்பனுடைய வாழ்வையும் கவிதையையும் ஒருங்கே வசிகரித்து மலரச் செய்த ஆசை தான் அது.

காவிய முகப்பிலே

தன்னுடைய சித்திர சாலையை ஒரு காவிய மாளிகையாக — ஒரு காவிய அரண்மனையாக — காவிய நாயகனாகிய இராமனுக்கு ஏற்ற ஒரு காவியப் பூங்கோயிலாக — அமைக்க ஆசைப்பட்டது அந்தக் கவியுள்ளம். அத்தகைய லட்சிய ஆசை இழுத்துப் போன வழிதான், உள்ளபடியே “கம்பன் போன வழி”. எனினும் அந்த லட்சியத்தை நினைத்துப் பார்க்கும் போது, தன் காவிய முயற்சியெல்லாம் விளையாட்டுப் பிள்ளைகள் வீடு கட்டி விளையாடும் கதைதான் என்று கூடச் சொல்ல முடியாதே!—என்று தோன்றுகிறது கம்பனுக்கு. அந்தப் பிள்ளைகள் சுண்ணாம்புக் கட்டியையோ, செங்கல் — துண்டையோ எடுத்துக் கோடுகள் கீறி அந்தக் கீறல்களையே வீடென்று பாவித்துக் கொள்ளும் கதைதான்! — என்றெல்லாம் அந்தக் குழந்தை - முகம் நம்மோடு கொஞ்சி உரையாடப் பார்க்கிறது, — காவிய மாளிகையின் முகப்பிலே — முன்வாசற் பூஞ்சோலையில் அடியெடுத்து வைத்ததும்.


அந்த விளையாட்டுக் குழந்தைகள், “வீட்டுக்குப் படுக்கை அறையும் வேண்டாமா?” என்று யோசிக்கின்றனவாம். அதற்கும் ஒரு கீறல்தான்! நடன மண்டபமும் இருந்தால் நல்லதுதானே: அதற்கு இன்னும் சில கீறல்கள்! அதே கீறல்கள், நடன சாலையோடு கூடிய மாளிகையாகவும் தோன்றிவிடும், அவர்கள் மனோபாவத்திலே! ஏன்? அழகான அரண்மனையாகவும் தோன்றக்கூடும்; கோயிலாகவும் தோன்றக் கூடுமே! “இப்படி யெல்லாம் குழந்தைகளின் மனசிலே படுவது போலத்தான் என் கவிகளும் ஒரு காவிய மாளிகையாகப் படுகின்றன என் மனோபாவத்திலே!” என்கிறான் கவிஞன்.

அந்தக் குழந்தை - விளையாட்டைச் சிற்பிகள் பார்த்ததும், “இது கோயில் இல்லை; அரண்மனை இல்லை; வீடும் இல்லையே!” என்று கண்டிக்கப் போகிறார்களா? “அப்படியே, என் விஷயத்திலும் முறையாக நூல்களைக் கற்றுணர்ந்த பண்டிதர்களும் நடந்து கொள்வார்கள்!” என்று எதிர் பார்க்கிறான்:

> அறையும் ஆடரங்-
> குப்படப் பிள்ளைகள்
> தறையில் கீறிடில்,
> தச்சரும் காய்வரோ?
> இறையும் ஞானம்
> இலாதஎன் புன்கவி,
> முறையில் நூல்உணர்ந்-
> தாரும் முனிவரோ?

[ஆடரங்கு—ஆடுவதற்கு உரிய நடனசாலை. பட—தோன்ற. தறை—தரை; நிலம். தச்சர்—(இங்கே) சிற்பிகள். காய்வரோ—கடிந்து பேசுவார்களோ. இறையும் — சிறிதும். புன்கவி — அற்பமான பாடல்கள். முனிவரோ—கோபிப்பார்களோ.]

கம்பனுடைய இந்தப் பெரும் பணிவு இராமானுஜரைக் குறித்து வழங்கும் கதை ஒன்றை ஞாபகப்படுத்துகிறது. ஒரு நாள் ஸ்ரீரங்கத்து வீதியில் சிறு பிள்ளைகள் விளையாடிக் கொண்டிருக்கும்போது, அவர்களில் ஒருவன் சில கோடுகளைத் தரையிலே கீறி, "இது தான் கோவில்!" என்று சொன்னானாம். (ஸ்ரீரங்கத்துப் பிள்ளையல்லவா? விளையாட்டிலும் பக்தி தான்!) வேறொருவன் வேறொரு கோடு கீறி, "இது தான் பெரிய திருமண்டபம்!" என்றானாம். அந்த சமயத்



தில் அங்கே இராமானுஜர் வந்து சேர்ந்தார். உடனே, "இதோ உம்முடைய பெருமான்!" என்று காலால் கீறிக் காட்டினார்களாம் சிறுவர்கள். பெரியவர் நமஸ்காரம் செய்தாராம் வெகு விநயமாக. சிறு பிள்ளைகளின் விளையாட்டிலும் சித்தாந்த உண்மை கண்டார் இராமானுஜர். அத்தகைய விளையாட்டிலே கம்பன் காவிய உண்மை கண்டான்; கலை விளக்கம் கண்டான்.

கம்பன் ஒரு சமயம் யாத்திரை செய்து கொண்டிருக்கும் போது வழியிலுள்ள ஒரு பெருமாள் கோவிலுக்குத் தனியாகவே போயிருந்தானும். அங்கே "நாராயணாய நம" என்று சொல்லிக்கொண்டு பலரும் சாஷ்டாங்க நமஸ்காரம் செய்து சரணாகதி பண்ணிக் கொண்டிருந்தார்கள். தேங்காய் பழம் பணம் முதலான காணிக்கைகளும் கொடுத்துக் கொண்டிருந்தார்கள். கம்பனோ அப்படி ஒன்றும் செய்யாமல் சும்மா நின்று கொண்டிருந்தானும்.

அவர்களில் சிலர் இவனை நோக்கி, "ஏனையா இப்படி நின்று கொண்டிருக்கிறீர்? காணிக்கை இல்லா விட்டாலும் நாராயண மூர்த்தியின் பாதங்களில் விழுந்து நமஸ்கரிக்கலாகாதா?" என்று கேட்டு விட்டார்களாம். அதற்குக் கம்பன் பெரும் பணிவோடு விடையாகக் கூறிய பாட்டு:

மி. 1 நாராய ணாய
நமவென்னும் நன்னெஞ்சர்,
பாராளும் பாதம்
பணிந்தேத்து மா(று)அறியேன்;
காராளும் மேனிக்
கருணா கரமூர்த்திக்(கு)
ஆரா தனை.என்
அறியாமை ஒன்றுமே! (க. மணை. 7)

[என்னும் நன்னெஞ்சர் — என்று வழிபடும் நல்ல நெஞ்சையுடைய ஞானிகள். பார் — பூமி, உலகம். ஏத்துமாறு — துதிக்கும் வழி. காராளும் மேனி — (நிறத்திலும் இயல்பிலும்) மேகத்தை ஆளும் திருமேனி. கருணாகரன் — கருணைக்கு இருப்பிட மானவன்.]

'நாராயணன்' என்றால் எங்கும் வியாபித்திருப்பவன் அல்லவா? "அவனுடைய (அருளுக்கு அறிகுறியான) பாதமே உலகத்தை யெல்லாம் வியாபித்து ஆண்டுகொண்டிருப்பதாக ஞானிகள் சொல்லுகிறார்களே: அப்பேர்ப்பட்ட பாதத்தை அந்த ஞானிகள் எப்படி வழிபடுகிறார்களோ, அந்த வழி எனக்குத் தெரியவில்லையே!" என்கிறான் கம்பன். எங்கும் நிறைந்த அந்தப் 'பாராளும் பாத'த்தை எங்கே நின்று எப்படிக் கும்பிடுவது? — என்று தெரியாமல் திகைத்துத்தான் அப்படி நின்று கொண்டிருந்தானும். கண்ணனுடைய விசுவரூபம் கண்ட அர்ச்சுனன் பட்ட பாடு படுகிறது கம்பனுள்ளமும்.

சிறு பிள்ளைகள் காலால் கீறிய 'பெருமாளை'யும் பணிந்து போகும்படி இராமானுஜரைத் தூண்டிய அதே பெரும் பணிவுதான், கோவிலில் பெருமாளைப் பணிந்து போகவும் கம்பனுக்கு வழி தெரியாதபடி செய்துவிட்டது!

இப்படி "வழி தெரியவில்லையே!" என்று தன் அறியாமையை ஒப்புக் கொள்ளும் கம்பன், "பாராளும் பாதம் பணிந்தேத்தும்" வழி தெரியா

விட்டாலும் அந்த மூர்த்திக்கு "ஆராதனையாகக் காணிக்கை கொண்டு வந்திருக்கிறேன்" என்று சொல்லுகிறான். "இந்த என் அறியாமைதான் அந்தக் காணிக்கை!" என்கிறான்.

இறையும் ஞானம்
இலாதஎன் புன்கவி (௯)

என்று தன்னையும் தன் கவிதையையும் தன் காவிய முகப்பிலே அறிவித்துக் கொள்ளும் கவிஞன், வேறு எந்தக் காணிக்கை தான் கொண்டு வந்திருக்க முடியும்?

ஸாக்ரடிஸ் என்ற கிரேக்க மகாஞானியும் கம்பனைப்போல், "எனக்கோ ஞானம் என்பது கொஞ்சமும் இல்லை!" என்றும், "நான் அறிஞன் இல்லை!" என்றும் சொல்லிக் கொண்டிருந்தார். எனினும் மேதை என்ற பேரும் புகழும் அவருக்குக் கிடைத்தன. அவரைவிட அறிவாளி ஒருவனும் அக்காலத்தில் இல்லையென்றே தீர்மானித்துவிட்டார்கள். தன் 'அறியாமை'யை அறிந்துகொண்ட அறிவு அவருக்குத் தானே இருந்தது? மற்ற அறிவாளிகளுக்கோ அந்த அறிவும் இல்லையே!

கம்பனையும் "கல்வியிற் பெரியன்" என்று போற்றினார்கள். "கம்பன் வீட்டுக் * கட்டுத்தறியும் கவி பாடும்" என்றார்கள். இந்த வாக்கியங்கள் நம் தமிழ் நாட்டிலே பழமொழிகளாக இன்றும் வழங்கி வருகின்றன. "கல்வியிற் பெரியன் கம்பன்" என்பது இலக்கண நூல் உரைகளிலும் உதாரணமாய்க் காட்டப்படுகிறது.

இப்பேர்ப்பட்ட கம்பன் "எனக்குக் கொஞ்சமும் ஞானம் இல்லை!" என்றும், "என் அறியாமை ஒன்றே நான் கருணாகர மூர்த்தியாகிய பகவானுக்குக் காணிக்கை யாகக் கொடுக்கக்கூடியது!" என்றும் சொல்லியிருக்கிறான் — என்பதை நாம் நன்றாகச் சிந்தித்துப் பார்க்கவேண்டும். அறியாமையை அறிவிப்பது அறிவு! — என்பது தானே கிரேக்க ஞானியாகிய ஸாக்ரடிஸின் கொள்கை? அப்படித்தான் தமிழ் ஞானியான திருவள்ளுவரும் அபிப்பிராயப்படுகிறார்.

"அறிய அறிய, அறியாமையைத் தான் காண்கிறான் அறிவாளி!" என்று தமிழர்களின் பொது வேதமாகிய திருக்குறளில் தெளிவாகச் சொல்லியிருக்கிறார் திருவள்ளுவர். "அறிவுக்கு எல்லை கிடையாது; மேலும் மேலும் அறிய அறிய, முந்தின அறிவு அறியாமையாகத்தான் முடிகிறது!" என்பது திருவள்ளுவர் கருத்து.

பிற்கால ஐரோப்பிய அறிஞர் ஒருவரும் இதே கருத்தை உள்ளிட்டு, "உண்மை என்ற எல்லையற்ற கடல் என்னால் கண்டுபிடிக்கப்படாமலே அலைமேல் அலை யெறிந்து கொண்டிருக்கிறது! கரையிலே சிப்பி பொறுக்கும் குழந்தை நான்!" என்று சொல்லியிருக்கிறார்.

சமீபகாலத்தில் ஆங்கில நாட்டின் ஆஸ்தான கவியாக விளங்கிய அறிஞர் ஒருவரும், "நான் யார்? இருட்டிலே அழுது கொண்டிருக்கும் ஒரு குழந்தை; ஒளி வேண்டி அழுது கொண்டிருக்கும் குழந்தை; அழுகை தவிர வேறு பாஷை தெரியாத குழந்தை!" என்று பாடி யிருக்கிறார்.

இராமாயணம் பாட உத்தேசிக்கும் கம்பனுடைய மன நிலையும் இது தான். இந்த நிலையைத்தான் முக்கியமாக, வாழ்க்கையிலும் கவிதையிலும் 'கம்பன் போதன வழி' என்று சொல்லலாம்.

---

* கட்டுத் தறி = மாடு முதலியன கட்டும் கம்பம்.



இராமாயணம்

பி. ஸ்ரீ.

4. அரங்கேற்றம்

"ஒரே ஒரு ஊரில் ஒரு பூனை: அந்தப் பூனைக்குப் பாலின் ருசி தெரியாமல் இருந்தது. அந்த ஊர்ப் பெண்கள் அவ்வளவு ஜாக்கிரதையாகப் பாலை மூடி வைத்திருந்தார்கள்" என்று கம்பன் ஒரு குட்டிக்கதை சொல்ல ஆரம்பிக்கிறான்,—தன்னுடைய இராம கதையைக் கேட்க ரஸிகர்களும் கவிஞர்களும் கலைஞர்களும் பக்தர்களும் திரண்டு வந்திருந்த சபையிலே.


பூனைக் கதை

"அந்தப் பூனை ஒரு சமயம் பாலின் ருசியைத் தெரிந்து கொண்டது, யாரோ ஒரு பாட்டியின் சொற்ப அஜாக்கிரதையினால். பிறகு முன்னிலும் சமர்த்தாகி விட்டார்கள் வீடுகளில் எல்லாம். அது முதல் பூனை, 'எங்கே பால் கிடைக்கும்? எங்கே? எங்கே?' என்று ஏங்கிப் போய் அங்கும் இங்கும் அலைந்து கொண்டிருந்தது" என்று கதையைத் தொடர்ந்து சொல்கிறான் கவிஞன். ஸ்ரீரங்கநாதனுடைய சந்நிதியிலே கூடி யிருந்த சபை அந்தக் கதையையும், பால் நிலாப் பொழிவதுபோல் கருணை பொழிந்த — கம்பீரமான — அந்த முகத் தோற்றத்தையும் ஆவலாய்ப் பருகிக் கொண்டிருக்கிறது.

"அந்தப் பூனை அப்படிப் பாலைத் தேடித் தேடி எவ்வளவு காலமாய்த் தவித்துக் கொண்டிருந்ததோ? பாவம்: ஒரு நிமிஷமே ஒரு யுகமாகப் போயிருக்க வேணும்.....கடைசியாக அதற்கு எங்கேயாவது பால் கிடைத்ததா? என்? எப்படியோ ஒரு பாற் கடலையே கண்டு பிடித்து விடுகிறது அந்தப் பூனை!" என்று கொஞ்சம் நிறுத்துகிறான் கவிஞன். அப்போது அந்தக் கண்களிலே அலையெறிந்த வியப்பும் ஆசையும் பயபக்தியும் முகமெல்லாம் படர்ந்து சபையை அப்படியே வசீகரித்து விடுகின்றன.

கதை மேலும் தொடர்ந்து செல்லுகிறது. "செங்குத்தான ஒரு பாறைமேலிருந்து பார்க்கிறது பூனை. அலைகள் மலைபோல வந்து மோதுகின்றன. என்ன ஓசை! ஆ, என்ன உயரம்! அந்த ஒரு அலை போதுமே இந்தப் பிராணியை இருந்த இடமும் தெரியாமல் இழுத்துக் கொண்டு போவதற்கு! எனினும் அந்தப் பூனை அந்தக் கடலுக்குள் இறங்கிப் பாலைக் குடிக்க ஆசைப்படுகிறது! என்ன? அந்தப் பாற்கடல் முழுவதையும் குடித்து விட வேணுமென்றே ஆசைப்படுகிறது! 'இதோ நக்கிப் பருகி விடுவேன், ஒரு துளியும் மிச்சம் விடாமலே!' என்று துணிந்து இறங்கப் போகிறது!" என்று கதையை முடிக்கிறான். என்ன ஆசை! ஆ, என்ன ஆபத்து!

ஆம்; கம்பனுடைய மனக்கண் முன் அலைமேல் அலை யெறிந்து



பொங்கிக்கொண்டிருக்கிறது ஒரு பாற் கடல்போலே, இராம கதை என்ற அந்த வீர சரித்திரம் :

ஓசை பெற்(று)உயர்
    பாற்கடல் உற்(று)ஒரு
பூசை முற்றவும்
    நக்குபு புக்கென,
ஆசை பற்றி
    அறையல்உற் றேன்,மற்(று)இக்
காசில் கொற்றத்(து)
    இராமன் கதை,அரோ !

[உற்று — அடைந்து. பூசை — பூனை. முற்றவும் — முழுவதையும். நக்குபு—நக்குவதற்கு. புக்கென—புகுந்தாற்போல. அறையல் உற்றேன்—சொல்லத் தொடங்கினேன் ; முழக்கத் தொடங்கினேன். காசு—குற்றம். காசில் (காசு இல்)—குற்றமில்லாத. கொற்றம்—வீரம் ; வெற்றி. அரோ—அசைச் சொல்.]

ஓ—சை என்று தொடங்கிக் கம்பன் "ஓசை பெற்று உயர் பாற் கடல்" என்று பாடியதும், 'ஓ!' என்று கோஷிக்கும் கடல் உயர்ந்துவரும் அலைகளோடு கண்முன் தோன்றி விட்டது சபையோருக்கு. அப்படியே "ஆ—சை பற்றி" என்று பாடும்போது, 'ஆ' என்று விழுங்குகிற அந்த ஆசையே ஞாபகத்திற்கு வந்து விட்டது. பாட்டின் சப்த ஜாலம், அந்த அலை பட்ட பாற்கடலோரத்துப் பாறைமேல் பூனையைப் பிரத்தியட்சமாக்கி விட்டது ; அவ்வளவு ஆசையோடு கவிஞன் தனக்கு எதிரே கண்ட அந்த இராமாயணக் கடலையும் பிரத்தியட்சமாக்கி விட்டது, சபைக்கு எதிரே !

தெய்வக் கதையும் தெய்வக் கவிதையும்

கம்பன் இளமையில் ஒரு சமயம் இராம கதையின் ருசியைக் கண்டு கொண்டான் என்று ஊகிக்கலாம். அதை அவனால் மறக்கவே முடியவில்லை. வயது ஆக ஆக வால்மீகி ராமாயணத்தின் கவிச் சுவையையும் அறிந்து அனுபவித்து வந்தான் என்றும் ஊகிக்கலாம். வால்மீகி காலத்திற்குப் பின்பு இராமாயணம் பாரத பூமி யெங்கும் ஒரு பக்தி வெள்ளமாகப் பெருகித் தமிழருள்ளங்களையும் வளமுறச் செய்து விட்டதல்லவா? இராம பக்தி என்ற அந்தச் சுவையையும் கம்பன் விசேஷமாக அனுபவித்தான். வயது முதிர முதிரக் கவிஞனுடைய பக்தியும் முதிர்ந்து கொண்டே வந்தது. அந்த நிலையில் இராம கதை ஒரு தெய்வக் கதையாகவே தோன்றி யிருக்க வேண்டும்.

வால்மீகியின் தெய்வக் கவிதையில் ஊறிக் கிடந்த உள்ளம், "தமிழிலும் அத்தகைய தெய்வக் கவிதையிலே அமையவேணும் இந்தத் தெய்வக் கதை" என்று ஆசைப்பட்டது. ஸத்திய வீரனாகிய இராமனது கதை, தெய்வமாக் கவிதையைக் குறிக்கும் ஆச்சரியமான ஓசை (Rhythm) யோடு — ஆம், அந்த அலைகள் போடும் தாளங்களோடு — தனக்கு முன்னே பொங்குவதாகக் கவிஞன் குறிப்பிடுகிறானல்லவா?

அந்தப் பாற்கடல் தமிழிலும் பொங்கி வரவேண்டுமே; அந்தப் 'பகற் கனவு' நனவாக வேண்டுமே; அந்தப் பேராசை நிறைவேற வேண்டுமே; அந்த உயர்ந்த லட்சியம் கைகூட வேண்டுமே! தவறிவிட்டால் உலகம் இகழுமே; குற்றம் ஏற்படுமே! இந்த அச்சத்தையும் அந்த ஆசை லட்சியம் செய்ய வில்லையாம். "என்னுடைய புன்கவிகளோடு ஒப்பிட்டுப் பார்த்து, (வால்மீகி முதலான மகாகவிகளின்) தெய்வமாக் கவிதையின் மாட்சியே மாட்சி — என்றுவது நீங்கள் தெரிந்து கொள்ளலாமே!" என்கிறான் கம்பன் சபையை நோக்கி.

ஜிகினாத் தகட்டைப் பார்த்துத் தங்கத் தகட்டின் மாட்சி தெரிவது போலத் தெரிந்து விடுமாம்:

04 வையம் என்னை
இகழவும், மா(சு)எனக்(கு)
எய்த வும்,இ(து)
இயம்புவ(து) யாதெனில்:
பொய்யில் கேள்விப்
புலமையி னோர்புகல்
தெய்வ மாக்கவி
மாட்சி தெரிக்கவே! (க.06)

[வையம் — உலகம். மாசு — குற்றம்; அபகீர்த்தி. எய்தவும் — அடையவும். இயம்புவது — (இங்கே) பாடுவது. பொய்யில் — பொய்யில்லாத. புகல் — (பிரசித்தமாகச்) சொல்லுகிற. தெரிக்க — தெரிவிக்க.]

கம்பனுடைய உள் மனத்திலே ஊறி ஊறி உயிரோடு உயிராய்க் கலந்து போன அந்த லட்சிய ஆசையைக் கண்டு பிரமித்துப் போயிருக்க மாட்டார்களா, உண்மையான புலமையோடும் உயர்ந்த மனப் பண்போடும் அந்தச் சபையில் வீற்றிருந்தவர்களெல்லாம்?

அந்தப் புலமையையும் மனப் பண்பையுந்தான் கம்பன் எவ்வளவு பொருத்தமாக,

பொய்யில் கேள்விப்
புலமை

என்று பாராட்டுகிறான்! அந்தக் கல்விப் புலமை போற்றும் கவிப் புலமையைத் 'தெய்வமாக் கவிதை' — என்கிறான்.

தெய்வ மாக்கவி
மாட்சி

என்று அந்த மாட்சியை, அரசர்கள் சக்கரவர்த்திகளின் அதிகார ஆடம்பர மாட்சிகளுக்கெல்லாம் எவ்வளவோ மேலாகத் தூக்கிக் காட்டுகிறான்! கலைகளின் மகாராணியாகிய கவிதை யல்லவா? கவிதையிலும், (வால்மீகி பகவானுடைய கவிதை போன்ற) தெய்வமாக் கவிதை யல்லவா?

கவிதைகளைத் தங்கள் காதில் போட்டுப் போட்டுப் பார்த்த வண்ணமாயிருப்பார்களாம் 'பொய்யில் கேள்விப் புலமை' வாய்ந்த ரஸிக சிகாமணிகள். கள்ள நாணயங்களைக் கண்டுபிடித்துவிடும் 'ஷ்ராப்'களின் (Shroff

காது போல ரஸிகர்களின் காதும் கள்ளக் கவிகளைக் கண்டு பிடித்துத் தள்ளி விடுமாம். இந்தப் பண்பட்ட காதுகளே உண்மைக் கவிதையைப் பந்தோபஸ்தாக வைத்துப் பாதுகாத்து வருகின்றன — நகைகளுக்கு நல்ல உறைகள் போலே! செவிச் செல்வர்களான ரஸிகர்களின் செவி என்ற இந்த உறையிலேதான் கவிதை என்ற அரும் பொருள் எவ்வளவோ காலமாக மாசு படாமல் காப்பாற்றப்பட்டு வந்திருக்கிறது.

வேறொரு குட்டிக் கதை


“பொய்யில்லாத கல்வி கேள்விகளையும் கவிகளையும் கேட்டுக் கேட்டுப் பண்பாடு பெற்ற செவிகளிலா, என் கவிகளையும் போடத் துணிந்தேன்?”—என்று அஞ்சுகிறான் கம்பன். “வெட்கப்படுகிறான்” என்றால் போதுமா? பாவம்: அவர்களுடைய அவஸ்தையும் மரணாவஸ்தை தானே! — என்கிறான். உதாரணமாக ஒரு கதையும் சொல்லுகிறான்:

துறைஅ டுத்த
  விருத்தத்தொ கைக்கவிக்(கு)
உறைஅ டுத்த
  செவிகளுக்(கு) ஒதில்,-யாழ்
நறைஅ டுத்த
  அசுண நன் மாச்செவிப்
பறைஅ டுத்தது
  போலும்என் பாஅரோ! (7)

[துறை அடுத்த—பல துறைகளோடு அமைந்த. தொகை—கூட்டம். நறை—தேன். அசுணம்—ஒரு கற்பனை மிருகம்: கற்பனைப் பறவையென்று கருதுவோரும் உண்டு. நன்மாச் செவி—நல்ல, சிறந்த, செவி. பறை — (இங்கே) பறைக் கொட்டின் ஓசை.]

அசுணம் என்ற அந்தப் பிராணிகளை வேட்டையாடுவது கஷ்டமான காரியமில்லையாம். கொலைக் கருவிகளே தேவையில்லை; இசைக் கருவிகளே போதுமாம். யாழ் ஒன்று, பறைக் கொட்டு ஒன்று! அவ்வளவு தான். பறைக் கொட்டை மறைத்து வைத்துக் கொள்ள வேண்டியது. யாழை மீட்டியதும், அந்தப் பிராணிகள் அப்படியே வந்து மொய்த்து விடுமாம். சங்கீதம் என்றால் அவ்வளவு மோகம். அப்படி அந்த யாழிசையை அவை செவியால் பருகிக் கொண்டிருக்கும் போதே, ஒளித்து வைத்திருந்த பறைக் கொட்டை எடுத்துப் பளிச்சென்று கொட்டி விட வேண்டியதுதான்: அப்படியே செத்து விழுந்து விடுமாம் அந்த அசுணங்களெல்லாம். என்ன அதிசயமான வேட்டை! ரஸிகத்தன்மைக்குத்தான் என்ன அதிசயமான இதிகாசம்!

இந்தக் கதையையும் சொல்லி, “அசுணத்தின் காதில் விழும் பறைக் கொட்டைப் போலத்தான் ரஸிகர் காதிலும் விழப் போகிறது என் கவிதை!” என்று கம்பன் தன் இராம கதையை அரங்கேற்றத் தொடங்கினான். ஸ்ரீரங்கத்துக் கோவிலில் அன்று கேட்டுக்கொண்டிருந்த கலா ரஸிகர்களால் அந்தப் பெரும் பணிவையும் பேரறிவையும் வசீகர சக்தியையும் மறக்க முடியுமா? யாழின் இசையை யாழிலிருந்து வரும் தேன் (‘யாழ் நறை’) என்ற அந்த ரஸிகத் தன்மையைத்தான் மறக்கமுடியுமா? இன்றும் அன்று போலத்தானே ரஸிக உலகம்?



சித்திர ராமாயணம்

பி. ஸ்ரீ.

5. பித்தன், பேதை, பக்தன்

“பித்தர் அல்லது பைத்தியக்காரர் ஏதாவது சொன்னால் அந்தச் சொற்களையும் ஆராய்ந்து கண்டனம் செய்கிறவர்கள் உண்டோ? முத்தமிழ்ப் புலவர்களே! உங்கள் ஆராய்ச்சிக்கு என் பாடல்களும் உரியனவோ?” என்று கம்பன் சபையை நோக்கி மறுபடியும் அடக்கமாக ஒரு வார்த்தை சொல்லி விட்டு, இராமாயண காலட்சேபம் செய்ய விரும்பினான், ஸ்ரீரங்கராஜ சன்னிதானத்திலே. கவிச் சக்கரவர்த்தியின் இந்த 'அவையடக்கம்' கேட்டதும் சபை பிரமித்துப் போயிருக்க வேண்டும். ஸ்ரீ ரங்கராஜாவோ, “நம்முடைய ஆஸ்தான கவி” என்று சிரக்கம்பம் செய்திருக்க வேண்டும்!

ஆராய்ச்சிக்காராகள்

நாலு திசைகளிலிருந்தும் வந்திருந்த அந்தப் புலவர் கூட்டத்திலே கவிகளோடும் ரஸிகர்களோடும், ஆராய்ச்சி-அறிஞர்களும் காணப்பட்டார்கள் என்று கருதலாம். அந்த ஆராய்ச்சிக்காரர்களையும் ஆரம்பத்திலே சரிக்கட்டிக் கொண்டு போனால்தானே காலட்சேபம் இனிது நிறைவேறும்?

“ஆராய்ச்சிக்காரர்களா? அந்தக் காலத்திலுமா?” என்று ஒருவரும் சந்தேகப்பட வேண்டியதில்லை. ஆராய்ச்சியும் பகுத்தறிவும் தற்காலத்திற்கே உரியன என்று கருதுவது சரியன்று. அந்தக் காலத்துப் பண்டிதர்களுக்கும் குணதோஷங்களை ஆராய்ந்து கண்டு பிடிக்கத் தெரியும். அவர்களில் சிலர் தங்கள் 'கழுகுக் கண்'ணால் தோஷங்களையே கண்டு பிடிப்பதில் இக்காலத்து ஆராய்ச்சிக்காரர்களுக்கும் முதுகிலே மண் காட்டி விடுவார்கள்! இதனால் தோஷஜ்ஞர் என்று கூட ஒரு பெயர் உண்டு, பண்டிதர்களுக்கு. பிற்காலத்திலே நம் தமிழ் நாட்டில், பெரும் புலவராகவும் சிவநேசச் செல்வராகவும் விளங்கிய நுண்ணறிவாளர் ஒருவர், கம்பராமாயண முதற் செய்யுள் என்று தாம் கருதிய ஒரு பாட்டில் மாத்திரம்—ஒரு குற்றம், இரண்டு குற்ற

மல்ல்—நூறு தோஷங்கள் சொல்லித் தாமே சமாதானமும் சொல்லி யிருக்கிறார், தோஷ பரிகாரமாக!

கம்பன் அத்தகைய ஆராய்ச்சிக்காரர்களுக்கும் பணிந்து போக விரும்பி னன். அவர்கள் அறிவில் குறைந்தவர்களா? ஆராய்ச்சித் திறமையில் குறைந்தவர்களா? இயல்-தமிழ், இசைத் தமிழ், நாடகத் தமிழ் என்ற முத் தமிழையும் முறையாகக் கற்றவர்களாக இருக்கக் கூடுமல்லவா? "கற்றுக் கவி பாடக் கூடியவர்களாகவும் இருக்கக் கூடும்; உத்தமக் கவி களாகவும் இருக்கக் கூடும்" என்கிறான்.

"இத்தகைய ஆராய்ச்சிக்காரர்களை எப்படித் திருப்தி செய்ய முடியும், நம்முடைய கவிதையைக் கொண்டு?" என்ற கவலையும் கம்பனுக்கு ஏற் படத்தான் செய்கிறது, இராமாயண முகப்பிலே. ஏன்? கம்பனும் 'கல்வி யிற் பெரியவன்'தானே? ஆனல் இவனுடைய கவிதை, கற்று வந்த கலையில்லையே: இது கல்லாக் கலை தானே!

எனவே, அந்த ஆராய்ச்சித் துறைத் தலைவர்களுக்கும் ஒரு வார்த்தை, ஒரு சமாதானம், ஒரு விண்ணப்பம்:



முத்த மிழ்த்துறை —
யின்முறை போகிய
உத்த மக்கவி-
கட்(கு)ஒன்(று) உணர்த்துவன்:
பித்தர் சொன்னவும்,
பேதையர் சொன்னவும்,
பத்தர் சொன்னவும்,
பன்னப் பெறுபவோ?

[போகிய — நன்கு பயின்ற.
கவிகட்கு — கவிகளுக்கு.
உணர்த்துவன் — அறிவிப்

பேன். பேதையர் — பெண்கள்; (இங்கே) காதலிகள். பல்ல — ஆராய.]

'நான் ஒரு பித்தன்!'

“முத்தமிழ்த் துறையில் முறைபோகிய உத்தமக் கவிக”ளே!—என்று எவ்வளவு பெருமையாகவும் அருமையாகவும் அவர்களை அழைக்கிறான்! அழைத்து, “நீங்கள் அப்பேர்ப்பட்ட ஒரு கவிஞனை என்னை மதிக்க வேணும் என்பதில்லை. ஏன்? ‘நான் ஒரு பித்தன்’ என்று உங்கள் வாயால் பேசி விட்டாலும் குற்றமில்லை!” என்று விண்ணப்பம் செய்து கொள்ளுகிறான். சாமானியர்களும் பித்தன் என்று இகழும்படி லட்சியத்திலே தன்னை முழுக்க முழுக்க இழந்துபோன பேர்வழி அல்லவா?

பைத்தியத்திலும் பல ரகம். ஒவ்வொருவனுக்கு ஒவ்வொரு பைத்தியம். உலகமே ஒரு பித்தர் சாலை. கம்பனுக்குப் பைத்தியம், இராமாயணப் பாற்கடலிலே தன்னை இழந்து தமிழ்க் கவிதையாகப் பொழிந்து விட வேண்டும் என்பதுதான். எந்த ரகமானாலும் பித்தன் பித்தன்தானே! “பித்தர் பேச்சும் ஆராய்ச்சிக்கு உரியதோ?” என்று ஆராய்ச்சிக்காரர்களை நோக்கிக் கேட்கிறான்.

'நான் ஒரு காதலி!'

“இன்னும் கொஞ்சம் தயவாக இந்த என் முயற்சியை நீங்கள் நோக்க விரும்பினால், பித்தன் சொல்லாகக் கருதாமல் என் கவிதையைக் காதல் வெறியிலே



பிறந்த வார்த்தைபோல் வைத்துக் கொள்ளலாமே!'' என்கிறான். காதல்-பேச்சும் ஆராய்ச்சிக்கு நிற்குமா? தர்க்க ரீதியாகவோ, பகுத்தறிவுக்குப் பொருத்தமாகவோ இருக்க முடியுமா? 'பேதைய'ராகிய காதலிகளின் வார்த்தையில், மயங்கிப் போகாத ஆராய்ச்சிக்காரர்களுக்கு அகப்படுவது பேதைமை அல்லது மடமைதானே?

ஆனால் அந்தப் 'பேதையர் சொன்ன' வார்த்தைகளைக் காதல 'பேதைமை'யாகவா பார்க்கிறார்கள்? கவியின்பத்தை ரஸிகர்கள் அனுபவிப்பதுபோல் அனுபவிக்கிறார்களாம், காதலர்களும் தங்கள் காதலி மார் கொஞ்சிப் பேசும் மழலைச் சொற்களை.

> மையற் பேதை மாதர்
> மிழற்றும் மழலைச்சொல்,
> தெய்வப் பாடல்-சொற்கலை
> என்னத் தெரிவாரும் . . (. . . .)

[மையல் — காதல் மயக்கம். மிழற்றும் — மெல்லக் கூறும். சொற் கலை — 'சொல் அமைப்பு முறை' என்ற கலை.]

என்று அந்த நிலைமையைக் கம்பனே வேறொரு சந்தர்ப்பத்தில் வெளி யிடுகிறான்.

ரஸிகர்களும் கவிஞர்களும் ஒருவகையில் காதலர்களே! குறுகிய காதலர் இல்லை; பெருங் காதலர்! குருட்டுக் காதல் அன்று; கண் திறந்த மகத்தான காதல். அந்த வழியே சென்று பாவனை-உலகத்தில் பிரவே சிக்க முடியாத பகுத்தறிவாளர்களுக்குக் கவிதையெல்லாம் — காதலெல் லாம் — பைத்தியம் தான்!

'ஒரு பக்திக் காதலி!'

எனவே அவர்களை நோக்கிக் கம்பன், ''ஆம், பைத்தியமாகவும் கொள்ளலாம்; இஷ்டப்பட்டால் காதல்-பைத்தியமாகவும் கொள்ளலாம் என் வாக்கை. அல்லது பக்தி - வெறியிலே பிறந்த வார்த்தையாகவும் கொள்ளலாம். பைத்தியத்திலோ, காதல்-பைத்தியத்திலோ, பக்திப் பைத் தியத்திலோ சொன்ன வார்த்தைகளெல்லாம் ஆராய்ச்சிக்கு உரியனவோ?'' என்று குழந்தை போலக் கேட்கிறான் ஆராய்ச்சிக்காரர்களை நோக்கி.

இந்த வாக்கோடு, ''பைத்தியக்காரனும் காதலனும் கவிஞனும் மனோ பாவத்தில் ஒரே அச்சு!'' என்ற ஷேக்ஸ்பியர் வாக்கையும் ஒப்பிட்டுப் பார்க்கலாம். கம்பனோ, ''பைத்தியக்காரனும் காதலியும் பக்தனும் மனோ பாவத்தில் ஒரே அச்சு!'' என்று குறிப்பாகச் சொல்லுகிறான்; காத லுக்கும் பக்திக்கும் கவிதைக்கும் ஸாராம்சத்தில் தொடர்பு உண்டு என் பதை உய்த்துணர வைக்கிறான். எனினும் தன்னைக் கவிஞன் என்று கூடச் சொல்லிக் கொள்ள வில்லை! இராமனுடைய கவிஞன் என்ற அந்தப் பதவியையும் பட்டத்தையும் கேட்கத் துணியவில்லை. ராம பக்தன் என்ற அந்த ஸ்தானத்திற்குத்தான் ஆசை. ''ஏதோ பக்திப் பைத் யம்!'' என்று ஆராய்ச்சிக்காரர்களின் வாயிலிருந்து வந்தாலே போதுமா

விசுவாமித்திரனுக்கு வசிஷ்டன் வாயால் பிரம ரிஷிப் பட்டம் வந்தது போலத்தான்!

இத்தகைய நிலை ராம பக்திக்கு எல்லை இருக்க முடியுமா?

ஆரே னையும்ஒன் று சொல்லத்
தொடங்கி னும், அவ்விடத்(து)உன்
பேரே வரும்; என்ன பேறுபெற்
றேன்!

என்று இராமனை நோக்கி ஒரு பக்தன் கூறியதாக ஒரு பாட்டு வழங்குகிறது. "யாரைப் பார்த்து என்ன சொல்லத் தொடங்கினாலும்—திட்டத் தொடங்கினாலும் கூட—அது வராமல் அந்த இடத்திலும், ராமா! உன் பேர்தான் வருகிறது: என்ன பாக்கியம் பண்ணினேன்!" என்று குதூகலப்படும் நிலைதான் கம்பனுடைய பக்திப் பைத்தியமும்.

அயோத்தி ஜனங்கள் இராமனை எப்படிக் காதலித்தார்கள் என்பதைச் சொல்லும்போது கம்பன்,

உண் ணும்நீரி னும், உயிரி னும்,
அவனையே உகப்பார்!

[நீரினும் — நீரைக் காட்டிலும்.]

என்கிறான். "பார்த்தால் பசி தீரும்!" என்பது மட்டுமல்ல; இராமனை நினைத்துப் பார்த்தாலும் பசி தெரியாதாம்; தாகமும் தெரியாதாம். ஏன்? ஜனங்கள் தங்கள் உயிரைக் காட்டிலும் அதிகமாகவே அவனைக் காதலித்தார்களாம். இதுவும் கம்பனுடைய மன நிலைதான்.

இதனால்தான் பிற்காலத்துக் கம்பதாஸர் ஒருவர் — ஒரு சிலேடைப் புலி — ஹாஸ்யமாக, "மற்ற யானைகள் கம்பங்களிலே கட்டப்படும்; இராமன் என்ற யானையோ தானாகவே வந்து கட்டுப்பட்டது ஒரு கம்பத்திலே: அந்தக் கம்பம்தான் கம்பன்!" என்று பக்தி பரவசமாய்ச் சொல்லியிருக்கிறார்.

இத்தகைய பக்திக் காதல் — பக்திப் பைத்தியம் — கம்பன் கவிதைக்கு உயிராக — உரமாக — அமைந்து இதைத் தெய்வ கீதமாக்கி விட்டது. இத்தகைய அருட் கவிதையை ஆக்க முடியுமா, அழிக்க முடியுமா, ஆராய்ச்சி அறிவைக் கொண்டு?

* * * *

ஆக்கல், அளித்தல், அழித்தல் என்ற முத்தொழில் - விளையாட்டையும் செய்து கொண்டே உலகத்தை ஆட்டி வைக்கும் இறைவனுடைய திருவருளைச் சரணமாக அடைந்து காலட்சேபம் தொடங்குகிறான் ராம ராஜ்யத்தின் ஆஸ்தான கவியாகிய கம்பன். அதோ, ஸரயு நதி தீரமாகிய அந்த ராமராஜ்யம் மனக் கண்ணுக்கு இலக்காகிறது!



சித்திர ராமாயணம்

பி. ஸ்ரீ.

6. நதியும் நாகரிகமும்

ராம ராஜ்யத்தின் சிறப்பைக் கூறுவதற்கு முன்பு, அந்த நாட்டை வளஞ்செய்து அழகு செய்யும் ஸரயு நதியின் சிறப்பைச் சொல்லுகி ன் கம்பன். நலம் செய்து நாகரிகம் செய்வதும் ஆறுதான் நமது பாரத மியிலே. ராமாயண காலத்திலும் — என்? வேத காலம் தொடங்கி ளது வருஷம் வரை — இந்திய நாகரிகம் 'நதிக்கரை நாகரிகம்'தான். இதற்கு மாறாக, வெள்ளையர் நாகரிகத்தைக் 'கடற்கரை நாகரிகம்' என்று சால்லலாம்.)

சரி: நாகரிகம் நதியிலே பிறக்கிறது. நதி? மலையிலே பிறக்கிறது— ன்றுதானே சொல்லக்கூடும்? ஆனால் அந்த உற்பத்தி ஸ்தானத்தைக் விஞன் மேக மண்டலத்திற்கே உயர்த்தி விடுகிறான். வெண்ணிறம் காண்ட கோடை மேகம் கடல் நீரைப் பருகிக் கறுத்து வந்து, மலைமேல் ந்தக் கருங் கடலே அப்படி வந்து அலைமோதுவது போலப் படிந்து கிடக் றதாம். அந்த மழை மலைச் சரிவுகளிலே அடித்துப் புரண்டு மலைப்பாறை ளையும் மரங்களையும் புரட்டிப் பறித்துக்கொண்டு சேது பந்தனம் செய்ய ம் வானர வெள்ளம்போல் குதித்து ஓடி வந்து, உணவையும் நாக த்தையும் ஒருங்கே விளைவிக்கிறதாம் கோசல நாட்டிலே.

எம்மதமும் சம்மதம்

பழுக்கக் காய்ந்த தாமிரத் தகடு போன்ற கோடை வானத்திலே ம்பல் பூத்தது போலத் தோன்றும் அந்த நீரற்ற மேகம், திருநீறு பூசிய சக்திறமுள்ள) ஸம்ஹார மூர்த்தியாகிய சிவபெருமானைப் போலத் ான்றுகிறதாம். கார்மேகமாய் மின்னலோடு திரும்பி வரும்போது, ாலட்சுமியோடு ரட்சக மூர்த்தியான மகாவிஷ்ணு காற்று - வாகன



மேறி அப்பம ... ... வருவது
விருக்கிறதாம். உவமை எப்ப
இயற்கையில் ஈசன்; ஈச...
இயற்கை — என்ற தத்துவம்
எப்படி?

இயற்கையையும் பக்தியோடு பார்ப்பது நல்லதுதான். கம்பன் மே
களையும் பக்திக்கண்ணல் — சமரஸ ஞானக்கண்ணல் — பார்க்கிரு
வானத்தையும் பூமியையும், அகத்தையும் புறத்தையும் கம்பன் ஊடுரு
பார்க்கும் அந்தப் பார்வையே அலாதி!—என்று சொல்ல வேண்டும்.

"அரியும் அரனும் ஒண்ணு; அறியாதவன் வாயிலே மண்ணு
என்று தமிழ் நாட்டிலே சாதாரணமாய்ச் சொல்வதுண்டு.
வைஷ்ணவச் சண்டை யெல்லாம் செல்லச் சண்டை — பண்டிதர்க
ஊடல்! 'கல்வியில் பெரிய' கவிச்சக்கரவர்த்தியோ, பாமரர்களும் அ
திருக்கும் சைவ வைஷ்ணவ சமரச உணர்ச்சியைத்தான் வெளியிடுகிற
—ஸம்ஹார மூர்த்தி போலச் சென்ற கோடை மேகம் லக்ஷ்மீ நாரா
மூர்த்திபோல மீண்டு வந்தது என்று குறிப்பிடும்போது.

இத்தகைய சமரச உணர்வு, மேக மண்டலத்திலிருந்து மலைக்
மலையிலிருந்து காட்டுக்கும் ஓடி வரும் வெள்ளத்தோடு பொங்கிப்
வருகிறது.

கல்லிடைப் பிறந்து போந்து
    கடலிடைக் கலந்த நீத்தம்,
எல்லையில் மறைக ளாலும்
    இயம்பரும் பொருளீ தென்னத்
தொல்லையில் ஒன்றே ஆகித்
    துறைதொறும் பரந்த சூழ்ச்சிப்
பல்பெருஞ் சமயம் சொல்லும்
    பொருளும்போல், பரந்த தன்றே.

[கல் — (இங்கே) மலை. நீத்தம் — வெள்ளம். எல்லையில் — எல்லையில்லாத. மறை — வேதம். இயம்பரு — சொல்லுதற்கு அருமையான. ஈது — இது. தொல்லையில் — ஆதியில். சூழ்ச்சி — (இங்கே) உபாயம். பல் — பல. பரந்தது — பரவி வந்தது.]

என்று அந்த ஆற்றுப் பெருக்கை எப்படிச் சிறப்பித்துப் பேசுகிறான், பாருங்கள்!

மலையிலே பிறந்து கடலிலே சங்கமிக்கும் ஸரயு ஆதியில் ஒன்றுதானும், ஆதிப் பரம்பொருள் போலே. எனினும் எத்தனை துறைகள் இந்த ஆற்றிலே,—பரம்பொருளை வழிபடும் பல வேறு ஞானத் துறைகளாகிய சமயங்கள் போலே! ஆதியில் ஒன்றாகிய ஸரயு எத்தனையோ துறைகளாகப் பெருகிப் பரவி வந்த போதிலும், எத்தனையோ கிளைகளாகப் பிரிந்து வந்தபோதிலும், முடிவில் கடலுக்குள்ளே ஐக்கியமாகி மறைந்து போகிறது. இப்படியேதான் பெருஞ் சமயங்களின் தோற்றமும் ஒட்டமும் முடிவும் — என்கிறான் கவிஞன். "எம்மதமும் சம்மதமே" என்ற இந்தப் பெருங் கொள்கையை ஸரயு ஆற்றின் உபதேசமாக வெளியிடுகிறான்.

பலவேறு ... ஞ் சமயங்களும் மக்களை நல்வழிப் படுத்துவதற்காக அந்த அந்தச ... த்துப் பேரறிஞர் செய்துவைத்த 'சூழ்ச்சி' அல்லது உபாயங்கள்—என்று கூறும் மன நிலையைப் பாருங்கள். அந்த அந்தச் 'சூழ்ச்சி'க்கு உட்பட்டுப் பரம்பொருளும் ஜனங்களுக்குப் பல படியாக அருள் செய்து வருகிறதாம். நம்பிக்கைக்கும் ஆராய்ச்சி - அறிவுக்கும் ஒருங்கே பொருத்தமான கொள்கை. உலகத்திலுள்ள பல பெருஞ் சமயங்களிலும் இந்து மதத்திற்கே சிறப்பாக உரிய கொள்கை. பலவேறு மதங்களும் சகோதர மதங்களாக ஒத்து வாழக்கூடிய கொள்கை. கம்ப ராமாயணம் வளர்த்து வரும் சர்வ சமய சமரச சன்மார்க்கப் பெருங் கொள்கை இது.

ஸரயுவும் சகோதர தர்மமும்

அடுத்த பாட்டிலே — அதாவது, இந்த ஆற்றுப் படலத்தின் இறுதிப் பாட்டிலே — கம்பன் இந்தச் சமரச சன்மார்க்கத்தின் அடிப்படையான



தத்துவத்தையும் வெளியிடுகிறான், போகும் போக்கிலே. ஆம், ஸ
போகும் போக்கிலே:

தாதுகு சோலை தோறும்,
சண்பகக் காடு தோறும்,
போதவிழ் பொய்கை தோறும்,
புதுமணல் - தடங்கள் தோறும்,
மாதவி வேலிப் பூக
வனந்தொறும் வயல்கள் தோறும்,
ஓதிய, உடம்பு தோறும்
உயிரென, உலாய தன்றே.

[தாது—மகரந்தத் தூள். உகு—சிந்துகிற. போது—மலரும் ப
வத்தில் இருக்கும் அரும்பு. அவிழ்—விரிகிற. பொய்கை—இயற்கையா
உண்டாகும் நீர் நிலை. மணல் தடம்—மணற்கேணி; அதாவது, மணலை
தோண்டினால் ஊறும் கிணறு. மாதவி—ஒரு விதமான குருக்கத்தி. பூ
வனம்—கமுகந் தோட்டம். உலாயது—உலாவிற்று.]

ஸரயுவின் தண்ணீர்தான் பச்சைப் பசுஞ் சோலைகளாக வளர்ந்
மோதிக் கொண்டிருக்கிறதாம். சண்பகக் காடுகளாகவும் அடர்ந்து கிட
கிறதாம். அந்த இராஜ்யத்திலுள்ள பல வகையான நீர்நிலைகளுக்கு ஆத
ரமும் அதே ஸரயு நீர்தான். மணலில் தோண்டத் தோண்ட ஊறிவரு
அந்த மணற்கேணியும் ஸரயு ஜலம்தானாம். அதே ஆற்று வெள்ளம்தா
தோட்டங்களாகவும் வயல்களாகவும் செழித்துக் கிடக்கிறதாம். இத்தகை
வளங்களுக் கெல்லாம், அழகுகளுக் கெல்லாம், ஒரே உயிராக ஓடிக் கொ
டிருக்கும் ஸரயு நதி பல வேறு உடம்புகளிலும் பரந்து உலாவிக் கொ
டிருக்கும் ஓர் உயிராகிய பரம் பொருளை ஞாபகப்படுத்துகிறது.

ஒரே பரம் பொருள் உயிர்களுக் கெல்லாம் உயிராகிச் சகோத
பந்தம் என்ற ஒரு தெய்விக பாசத்தால் உயிர்களை யெல்லாம் ஒன்றாக
கட்டி யிருக்கிறது. இந்தக் 'கட்டுப்பாட்டி'ன் விளைவுகள் தான் மற்ற
கட்டுப்பாடுகளெல்லாம் — ஆம், அவசியமான கட்டுப்பாடுக ளெல்லா
இது கம்பனுடைய சர்வ சமய சமரஸ சன்மார்க்க வேதாந்தம்.

செல்வம் கொழிக்க, தருமம் தழைக்க, நாகரிகம் வளர அந்த ஸர
வெள்ளம் பல வாய்க்கால்களிலும், — ஒரு கால்வாயிலிருந்து மற்றொ
கால்வாயாகவும் — பிரிந்து நாடெங்கும் உலாவிக் கொண்டிருக்கிறதாம்.

கோத்தகால் ஒன்றின் ஒன்று
குலமெனப் பிரிந்த தன்றே

[கோத்த — தொடர்ந்த, கால் — கால்வாய்; வாய்க்கால்.]

என்று வருணிக்கிறான் கம்பன். ஸரயு ஒன்றே பல கால்களால் ஓடுவது
போல், ஒரே உயிர்க் குலம் பல வேறு குலங்களாய்ப் பிரிந்து பெருகுகிறது—
என்று அந்தச் சகோதர தர்மத்தை வற்புறுத்துகிறான்.

"மனிதர்களும் சகோதரர்களாக வாழ வேண்டும்; மதங்களும் சகோ
தர மதங்களாகத் தழைத்து ஓங்க வேண்டும்" என்றெல்லாம் உபதேச
செய்து வருகிறதாம் ஸரயு. ஓடும் நீரும் வேதாந்தம் ஓதுகிறது கவிஞ

காதிலே. ராம ராஜ்ய வாசிகளெல்லாம் இத்தகைய வேதாந்தத்தை இயற்கையாகவே ஸரயுவைப் போல் உணர்ந்து வாழ்க்கையிலே பயன் படுத்திக் கொண்டார்கள் என்பது குறிப்பு.

ஸரயுவும் அரசாங்கமும்

இந்த நிலைமைக்கெல்லாம் முக்கியமான காரணம் அரசாங்கம்தான். இராமன் குலமாகிய சூரிய குலத்தைச் சேர்ந்த அந்த அரசர்களின் நல்லொழுக்கம் இடைவற்றுமல் பெருகி வந்திருக்கிறதாம், ஸரயு என்ற இந்த ஜீவ நதியின் பிரவாகம் போலே:

09 இரவி நன்குலத்(து)
　　எண்ணில்பல் வேந்தர்தம்
பரவு நல்லொழுக் —
　　கின்படி பூண்டது
சரயு என்பது. (23)

[இரவி — சூரியன். எண்ணில் — (பிறரால்) எண்ணுவதற்கும் முடியாத. பரவு — புகழ்தற்கு உரிய. படி — வடிவம்.]

சூரிய குலத்திலே வம்சப் பிரவாகமும் இடையறாது வந்திருக்கிறது; ஒழுக்கமும் இடையறாது பெருகி வந்திருக்கிறது — என்பதற்கு ஜீவ நதியாகிய ஸரயுவின் பெருக்கும் ஓர் அறிகுறிதான். கோசல நாட்டு மன்னர்களின் நல்லொழுக்கம் உபமானமாகவே பிரஸ்தாபிக்கப்பட்ட போதிலும், இதை ஆரம்பத்திலே ஞாபகப்படுத்திவிட வேண்டும் என்பது கவிஞனுடைய நோக்கம் போலத் தோன்றுகிறது. இப்பேர்ப்பட்ட பேரரசர்கள் இடையறாது வளர்த்து வந்த ஒழுக்கத்தின் சிகரமாக வருகிறான் புருஷோத்தமனும், அரசர்களுக்கெல்லாம் 'முன் மாதிரி'யுமான இராமன் — என்பது குறிப்பு.

இப்படி யெல்லாம் ராம ராஜ்யத்தை நலம் செய்து நாகரிகம் செய்து பார்க்கும் ஸரயுவை அந்தக் கோசல மன்னர்களை யெல்லாம் — கோசல மக்களை யெல்லாம்—பாலூட்டிச் சீராட்டி வளர்க்கும் தாய் என்று — முடி சூட்டிவைக்கிறான் கவிஞன். "ஸரயு என்பது தாய்ப் பால், அந்த நாட்டிலுள்ள உயிர்களுக்கெல்லாம்" — எவ்வளவு பொருத்தமான உபமானம்!

நல்லது: அந்த நாட்டு மன்னர்களும் குடிகளுமாகிய உயிர்களெல்லாம் ஸரயு என்ற ஒரு தாயின் மக்கள்; எனவே சகோதரர்கள் — என்பதும் குறிப்பு. அவர்கள் மற்ற உயிர்களையும் "இளைய சகோதரர்களாகக் கருதி ஒழுகின்றார்கள் — என்றும் கருதலாம். ஒருயிராகிய பரம்பொருளின் உண்மையை உணர்ந்தவர்களல்லவா?

"ஸரயு நதி எத்தகைய நாகரிகத்தை விளைத்திருக்கிறது தன் இரு கரைகளிலும், பாருங்கள்!" என்று காட்டி, அந்த நாட்டை வருணிக்கப் போகிறான் கம்பன்.



சித்திர ராமாயணம்

பி. ஸ்ரீ.

7. ராணியின் கொலு


ஸரயு நதி தீரமாகிய ராம ராஜ்ய வருணனை ஆரம்பமாகிவிட்டது. கேட்டவர்களெல்லாம் கவிஞனுடைய அந்தக் கனவு - லோகத்திற்குப் போய்விட்டார்கள். ஸரயு வெள்ளம் பாயும் அந்த ஓசைதான் எவ்வளவு தெளிவாய்க் காதில் விழுகிறது!

ஓசையும் அமைதியும்

ஆற்றங் கரையிலே ஆலைகளிலிருந்து கருப்பஞ்சாறு - பாயும் ஓசை ஒரு புறம்; எருதுகள் ஒன்றையொன்று முட்டிப் பாய்ந்து தாக்கும் ஓசை ஒரு புறம். தண்ணீரில் எருமைகள் போய் விழும் ஓசை ஒரு புறம். உழவர்களின் ஓசை ஒரு புறம்......இத்தகைய ஓசைகளைக் கேட்டதும், "காவேரி ஆற்றங்கரையிலிருந்து நாம் வெகு தூரம் போய் விடவில்லை!" என்ற ஞாபகமும் வரத்தான் செய்கிறது.

அவள் யார்?

ஆனால் இந்த ஸ்தூல ஓசைகளுக்கிடையே பளிச்சென்று நாடு முழுவதும் ஊடுருவிக் கிடக்கும் அமைதியும் புலனாகிறது. அமைதிக்கிடையே கம்பீரமாய்க் கொலு வீற்றிருக்கிறாள் ஒரு ராணி, அந்த ஆற்றங்கரைச் சோலையே கொலு மண்டபமாக. அந்த ராணிக்கு முன் நடன மாதர்போல் ஆடுகின்றன சோலை மயில்கள் தோகை விரித்து. செந்தாமரைப் பெண்கள் பொன் - விளக்கு ஏந்துகிறார்கள். அந்த மௌனம் குலைய மேகங்கள் மத்தளம் கொட்டுகின்றன; வீணாகானம் செய்கின்றன வண்டுகள். குவளை மலர்கள் அதிசயமாய்த் தங்கள் நீலக் கண்களை மலர விழித்து நோக்குகின்றன, அந்த நாட்டியக் கச்சேரியை. அக் காட்சியையும், அதைக் கண்டு



களிக்கும் அந்த மக
ராணியின் மாட்சியை
யும் திரையிட்டு
மறைப்பதும் வெளி
யிடுவதுமா யிருக்கின்
றன, அந்தத் தாம
ரைத் தடாகத்திலே தோன்றும் அலைகள். யார் அந்த நாடக மேடையிலே
அப்படிக் கொலுவிருப்பது?

அந்த நாடக ராணி இயற்கை-ராணி தான்; இந்தக் கோசல நாட்டின்
இயற்கை யரசி, அதிதேவதை!

தண்டலை மயில்கள் ஆடத்,
தாமரை விளக்கம் தாங்கக்,
கொண்டல்கள் முழவின் ஏங்கக்,
குவளை,கண் விழித்து நோக்கத்,
தெண்டிரை எழினி காட்டத்,
தேம்பிழி மகர யாழின்
வண்டுகள் இனிது பாட,
மருதம்வீற் றிருக்கும் மாதோ!

[தண்டலை – சோலையில். விளக்கம் — விளக்கு. கொண்டல் –
மேகம். முழவு – மத்தளம். ஏங்க – ஒலிக்க. குவளை – கருங்குவளை
என்ற நீலமலர். தெண்டிரை – தெளிந்த அலைகள். எழினி – (நாடகத்
திரைச் சீலை. தேம்பிழி — இனிமையான தேன். மகர யாழ் — ஒருவகை
இசைக் கருவி. யாழின் – யாழ்போல. மருதம் – வயல்களும், வய
சூழ்ந்த இடமும்; (இங்கே) மருதத்தின் அதிதேவதை.]

என்று கவிஞன் அந்த இயற்கை யழகுகளுக் கிடையே கோசல ராணியை
காட்டுகிறான், ஸரயு ஆற்றங் கரையிலே.

அமைதியிலும் அழகிலும் மூழ்கிக் களிக்கும் கோசல நாடு இப்போ
உயிர்ச் சக்தி நிறைந்த பொங்கும் விழிப்பு-நிலையில் இருக்கிறது. அந்த

பசுஞ்சோலைக்குள் உதய சூரியனுடைய பொன்னிறக் கதிர்கள் இப்போது தான் ஊடுருவிப் பாய்ந்து கொண்டிருக்கின்றன.

புது மணமும் பள்ளி யெழுச்சியும்

பசுஞ் சுடர்ச் சோலையாகிய இயற்கை - அரண்மனையிலே மயில்களின் 'பரத நாட்டியம்' கண்டு மகாராணி கொலுவிருக்கிறாள் என்றால், அதே நடனக் கச்சேரியோடு ஒரு புறம் இசை-வள்ளல்களான குயில்-காதலர்கள் பச்சை மரக் கிளைகளிலே பாடிக் களித்துத் தங்கள் பிரபுத்வம் தோன்றப் புதுமணம் கொண்டாடுகிறார்கள்! வேறொரு பக்கத்தில் ஒரு ராஜ ஹம்ஸம் (அரச அன்னம்) வண்டுகளின் வீணா கானத்தைக் கேட்டுக் கொண்டே தன் மலர்ப் படுக்கையிலிருந்து ராஜகுல மாட்சி தோன்றக் கம்பீரமாய்த் துயில் எழுகிறது. உண்மையில், கோசல ராணியின் மாட்சியெல்லாம், ஆனந்தமெல்லாம், குடிகளின் மாட்சிதான், ஆனந்தம்தான்.



அந்தத் திருமண வைபவத்தையும், பள்ளியெழுச்சியையும் கவிஞன் பாடுகிறான் :

குயிலினம் வதுவை செய்யக்
　　கொம்பிடைக் குனிக்கும் மஞ்ஞை
அயில்விழி மகளிர் ஆடும்
　　அரங்கினுக்(கு) அழகு செய்யப்,
பயில்சிறை அரச அன்னம்
　　பன்மலர்ப் பள்ளி நின்றும்
துயிலெழத் தும்பி காலைச்
　　செவ்வழி முரல்வ சோலை.

[வதுவை — கல்யாணம். கொம்பு — மரக்கிளை. குனிக்கும் — ஆடும். மஞ்ஞை — மயில். அயில் — வேல். அரங்கு — நாடகசாலை. பயில் — நெருங்கிய. சிறை — சிறகு. பன்மலர் — பல தாமரைமலர்கள். தும்பி — வண்டு. செவ்வழி — காலையில் பாடும் பண்; ஒரு வகைப் பழைய உதய ராகம்.]

இத்தகைய காட்சிகளையெல்லாம் கண்ணைத் திறந்து பார்த்து அனுபவிக்கக் கூடியவர்கள் கோசல நாட்டினர் — என்று ஊகிக்கலாம்.

இயற்கை - அன்னையின் மடியிலே குழந்தைகள் போல் சீராடி வளரும் இந்த நாட்டினர் இயற்கையின் படிப்பினையாகக் கற்றுக் கொண்டிருக்கிறார்கள், ரஸிகத் தன்மையோடு சௌந்தரிய உணர்ச்சிகளையும் — என்பது குறிப்பு.

என்ன அழகான வழக்கம்!

ராஜ ஹம்ஸத்தின் ரஸிகத் தன்மை, ராஜ குடும்பத்தில் மட்டுமா காணப்படுகிறது? இந்த நாட்டிலே மற்றக் குடும்பங்களிலும் பார்க்கக் கூடியதுதான். "உறக்கத்திலிருந்து விழித்தெழும் அந்தப் பெண்மணிகளைப் பாருங்கள்; மயில் போன்ற சாயலுள்ள அந்தப் பெண்மணிகள் வெள்ளிபோல் வெண்ணிறமான மாடத்தின்மேல் தாங்கள் படுத்திருந்த அந்தப் பொற்கட்டில்களிலிருந்து மயில் - தோகை போன்ற கூந்தல் குலைய இறங்கி வருவதை அதோ பாருங்கள்" என்று காட்டுகிறான் கவிஞன்.

ராஜஹம்ஸம் வண்டுகளின் உதயராகம் கேட்டு விழித்துக் கொண்டது போல் அந்தப் பெண்களும், பாடகர் யாழ்கொண்டு 'பள்ளியெழுச்சி' பாட அந்த இன்னிசைப் பாடல்களைக் கேட்டு விழித்துக் கொள்கிறார்களாம் :

தெள்விளிச் சிறுயாழ்ப் பாணர்
　　தேம்பிழி நறவம் மாந்தி
வள்விசிக் கருவி பம்ப
　　வயின்வயின் வழங்கு பாடல்,
வெள்ளிவெண் மாடத்(து) உம்பர்
　　வெயில்விரி பசும்பொற் பள்ளி
எள்ளருங் கருங்கண் — தோகை
　　இன்துயில் எழுப்பும் அன்றே.

[தெள்விளி - தெளிவான இசைப் பாட்டு. யாழ்ப் பாணர் - யாழ் வாசிப்பதில் வல்ல பாணர் என்ற வகுப்பினர். தேம்பிழி நறவம் - இனிய, வடித்த, கள். மாந்தி - குடித்து. வள்விசிக் கருவி - தோல் வாரினால் கட்டிய மத்தளம். பம்ப - ஒலிக்க. வயின் வயின் - அந்த அந்த இடங்

களில். உம்பர் - மேல்மாடம். [illegible]
வரு - பழிக்க முடியாத. தோகை - (இங்கே) மயில் போன்ற சாயலுள்ள பெண்கள். இன்துயில் - இனிய உறக்கம்.]

அழகு — ஆனந்தம் — அகத்தூய்மை

ஆனந்தமான காலை வேளையில் ஆனந்தமான இசைத் தேன் பருகி ஆனந்தமாகத் துயில் உணர்ந்து எழுகின்ற அந்த மாதர்களின் தினசரி வாழ்க்கை தான் எவ்வளவு அழகாயிருக்கவேண்டும்! இன்னிசைப் பாடல்களைக் கேட்டுக்கொண்டே அவர்கள் இனிமையாக உறங்குவார்கள் என்றும் ஊகிக்கலாம்.

அவர்கள் ஆனந்தமாய்ப் படுத்து உறங்கிய அந்தப் பொற்கட்டில்கள் இப்போது உதய சூரியனது பொன் வெயிலில் "வெயில் விரி பசும் பொற் பள்ளி" யாகத் தகதக வென்று ஜொலிக்கின்றன, அந்த 'வெள்ளி வெண் மாட'த்தின் மீது.

அந்தப் பெண்மணிகளின் 'கருங்கண்'களின் ஜொலிப்பைத் தான் பாருங்கள். ஆழம் காண முடியாத — ஒளி மயமான — கருங்கடல் அலையெறிவது போன்ற அந்தக் கண்கள், பரிசுத்தம் வாய்ந்த அவர்களது உள்ளத்தின் புறவாசல்கள் தான்!

சுந்தரமும் சுதந்திரமும்

தங்கள் இயற்கையான உள்ளத் தூய்மையை அவர்கள் கல்விப் பயிற்சியால் விசேஷமாய்ப் பண்படுத்தியிருக்கிறார்கள். அந்த அகத்தின்

களிலும்.

அவர்களுடைய செல்வமும் கல்வியும், அறமாகவும் விருந்தாகவும் விளை கின்றன :

13 பெருந்த டங்கண்
பிறைநுத லார்க்கெலாம்
பொருந்து செல்வமும்
கல்வியும் பூத்தலால்,
வருந்தி வந்தவர்க்(கு)
ஈதலும், வைகலும்
விருந்தும் அன்றி
விளைவன யாவையே ? (67)

[பெருந்தடங்கண் — மிகப் பெரிய கண்கள். பிறைநுதலார் — பிறைச் சந்திரன் போன்ற நெற்றியுடைய பெண்கள். ஈதல் — கொடுத்தல். வைகலும் – ஒவ்வொரு நாளும்.]

அந்த அழகுக் கண்கள் அறிவுக் கண்களாகத் திகழ்கின்றன ; எனவே அறம் வளர்க்கும் கண்களாகவும் விளங்குகின்றன. அவர்களுடைய சௌந்தரியமே ஸாராம்சத்தில் ஞான சௌந்தரியம் தான், தர்ம சௌந்தரியம் தான் !

அத்தகைய ஞான சுந்தரிகள் அறிவுத் துறையிலும் பொருளாதாரத் துறையிலும் ஒருங்கே சுதந்திரமுள்ளவர்கள் என்று கூடக் கவிஞன் குறிப்பிடுகிறான். பெண்களுக்கும் இந்தச் சுதந்திரம் பொருந்துமென்றே கோசல நாட்டார் கருதியிருக்கவேண்டும். "கல்வியும் பூத்தலால்" என்று கூறுவதால் அந்தப் பெண் கல்விதான் எவ்வளவு இயற்கையாக அந்த நாட்டிலே மலர்ச்சி பெற்றிருக்கவேண்டும்! தங்கள் செல்வத்தைக் கொண்டு விருந்து செய்ததோடு, அவர்கள் அறிவு - விருந்துகளும் கலை - விருந்துகளும் அளித்துக் கலை - வள்ளல்களாகவும் விளங்கினார்கள் — என்றும் ஊகிக்கலாம்.

செல்வமும் கல்வியும் பெண்களுக்குப் பொருந்திவிட்டால், குடும்பம் முழுகிப் போய்விடாது ; குடும்ப வாழ்க்கை விசேஷமாக மலர்ச்சி பெறும் ; ஒவ்வொரு பெண்ணும் தன் குடும்பத்திலே தர்ம ராணியாக அருளரசு புரிவாள் ! — என்ற கருத்தைத் தான் கவிஞன்,

வருந்தி வந்தவர்க்(கு)
ஈதலும், வைகலும்
விருந்தும் அன்றி
விளைவன யாவையே ?

என்ற வினாவிலே பொதிந்து காட்டுகிறான்.

இத்தகைய பெண்கள் கோசல நாட்டின் உண்மையான செல்வம் என் ? இவர்களில் ஒவ்வொருவரும் கோசல ராணி தான் !

இத்தகைய ராம ராஜ்யம் ஸரயு தீரத்திலே — இல்லை ; உபய காவேரி மத்தியிலேயே — சிருஷ்டியாகிறது, தமிழர்களின் எதிர்கால மகோன்னத நிலைக்கு ஒரு முற்குறியாக, — ராமராஜ்ய ஆஸ்தான கவியும் தீர்க்கதரிசியுமான கம்பன் திருவரங்கம் பெரிய கோயிலில், 'நாட்டுப் படலம்' நடத்திக் கொண்டிருக்கையில்.



சித்திர ராமாயணம்

பி. ஸ்ரீ.

8. லட்சிய சமுதாயம்

கவிஞன் பாடப் பாட, "இந்தச் சோழ நாடே அந்தக் கோசல நாடாகப் ரிணமித்து வருகிறதோ?" என்ற பிரமிப்பு உண்டாகிறது கேட்கிறவர் ளுக் கெல்லாம்.

பால் வளமும் தேன் வளமும்

'சடையப்ப பிள்ளை கிராம'மாகிய வெண்ணெய்நல்லூர்க் குளத்தி யிருந்து எருமை மாடுகள் சொட்டச் சொட்ட வீடு நோக்கிச் செல்லும் காட் சியைக் கம்பன் பார்த்து வருணித்திருக் கிறானல்லவா? (சோழ நாட்டின் சாதாரணமான காட்சிகளில் ஒன்றுதான்: எல்லாரும் பார்த்திருக்கக் கூடி து தான்.)

மோட்டெருமை வாவிபுக
முட்டுவரால் கன்றென்று,
விட்டளவும் பால்சொரியும்
வெண்ணெயே

என்று அந்தத் தனிப் பாட்டிலே வரும் அதே எருமைகளும் ராம ராஜ்யமா கிய கோசல நாட்டுக்கு எப்படியோ வந்து சேர்கின்றன! பாருங்கள் அதோ:

சர நீர்படிந்(து),
இந்நிலத் தேசில
கார்கள் என்ன
வரும்கரு மேதிகள்

[படிந்து—மூழ்கிக் கிடந்து. கார்—மேகம். மேதி—எருமை.]

மேகங்கள் வான வீதியில்தானே சஞ்சரிக்கும்? "ஆனால் சில மேகங் ள் இந்த நிலத்திலும் வந்து சஞ்சரிக்கின்றன — கோசல நாட்டிலே!" ண்கிறான் கவிஞன். அப்படி மேகம்போல் திரிகின்றனவாம் காரெருமை

கள் ஈரம் சொட்டச் சொட்ட. அந்த எருமைகளும் கன்றை நினைத்து
ப்பால் சொரிகின்றனவாம்.

சோழவள நாட்டின் பால்வளம் மட்டுமா? தமிழ் நாட்டின் தே
வளமும் கோசல நாட்டிலே தண்ணீர்பட்ட பாடுதான்! தேனிலேதா
எத்தனை வகை:

ஆலைவாய்க் கரும்பின் தேனும்,
அரிதலைப் பாளைத் தேனும்,
சோலைவாய்க் கனியின் தேனும்,
தொடைஇழி இறாலின் தேனும்,
மாலைவாய் உகுத்த தேனும்



[ஆலைவாய் — கரும்பா
களில். கரும்பின் தேன்
தேன்போல் இனிய கருப்ப
சாறு. அரி தலை — அரி
நனி. பாளைத் தேன்
இனிப்புக் கள்ளாகிய பத
கனியின் தேன்—பழச் சா
தொடை—ஒழுங்கு. இழி
இழிகின்ற; இறங்குகின்
இறால்—தேன் கூ
மாலை—பூமாலை. உ
த்த—சிந்திய.]

தேனும் பா
நிறைந்த (கம்ப
காலத்) தமிழ் நா
தேனும் பா
பெருக்கெடுத்
டும் கோசலமா
பரிணமித்து வி
றது,—கவி
என்ற இந்திர ஜ
த்தால்! இந்த வ
களையும் சோலை
யும் குளங்களை
எருமைகளையும்,
ளைகள் முதலிய
றையும்கூட, வ
துக்கொண்
கோசலம். எ
கனவு உருவா
விந்தையைப் பா
கள்.

என்ன உறவு!
என்ன ஒற்றுமை!



அதோ எருமை மாடு, …வளை, அன்னப் பறவை: என்ன …ேறாத கோஷ்டி! அன்னத் …ிற்கும் எருமைக்கும் தவளைக் …ும் என்ன உறவு—என்ன ஒற் …மை—இருக்கக் கூடும்?

தாயன்னம் கவலையில்லாமல் …ரிந்து கொண்டிருக்கிறது, …ள்ளையைத் தாமரைப் பூவாகிய …த்தையிலே படுக்க வைத்து …ட்டு. ஏன்? அந்தக் குஞ்சுக் …ப் பசிக்குமே—என்ற கவலை …ட இல்லையா?

…பக்கத்திலே வந்த எருமை, …ட்டிலே விட்டு வந்த கன்றை …னைத்துக் கனைக்கிறதல்லவா? …ப்போது சொரியும் பாலே …ந்தக் குஞ்சைப் போஷிக்கிற …ம்.

ஆனால் அந்தத் தவளை—அந்தத் தேரை—என்ன செய்கிறது? கத்திக் …ாண்டுதானே இருக்கிறது? ஆம்; அந்த ஓசையிலும் ஒரு கீதம். …துவே, பசி ஆறி உறங்கத் தொடங்கிய அன்னக் குஞ்சுக்குத் தாலாட்டுப் …டுகிறதாம். அந்தத் தாலாட்டைக் கேட்டுக் கொண்டே குஞ்சு இனிமை …கத் தூங்கி விடுகிறதாம்:

சேலுண்ட ஒண்கணாரில்
  திரிகின்ற செங்கால் அன்னம்
மாலுண்ட நளினப் பள்ளி
  வளர்த்திய மழலைப் பிள்ளை,
காலுண்ட சேற்று மேதி
  கன்(று)உள்ளிக் கனைப்பச், சோர்ந்த
பாலுண்டு துயிலப் பச்சைத்
  தேரைதா லாட்டும் பண்ணை.

[சேலுண்ட—சேல், மீனை ஒத்த. ஒண்கணாரில்—ஒளி பொருந்திய …ண்களையுடைய பெண்கள் போல. மால் உண்ட—(1) பெருமை பொருந் …ய; (2) அன்பு பூண்ட. நளினம்—தாமரைப்பூ. பள்ளி—படுக்கை. …ளர்த்திய—கிடத்திய. மழலைப் பிள்ளை—(இங்கே) இளங்குஞ்சு. …ல் உண்ட—காலில் பட்ட. சேற்று மேதி—சேறு அல்லது சகதியோடு …டிய எருமை. உள்ளி—நினைத்து. சோர்ந்த—சொரிந்த. பண்ணை—…யல்; (இங்கே) வயல்-பக்கம்.]

…நடை அழகு வாய்ந்த ஒரு பெண்ணை "அன்ன நடை நடக்கிறாள்!" …று சாதாரணமாய் வருணிக்கிறார்கள் அல்லவா? இங்கே அன்னம் தான்

பெண்ணின் நடை கற்கப் பழகுவது போல் நடந்து நடந்து பார்க்கிறதா
குஞ்சுக்கு இரை தேடும் கவலைகூட இல்லாததால், சௌந்தரிய உண
சிக்கு ஏற்ற அத்தகைய பயிற்சிகளுக்கும், பொழுது போக்குகளுக்கும் எவ்
ளவோ அவகாசம்!

குஞ்சுக்கோ விழிப்பும் பசியும் ஏற்பட்டதும், தன் கன்றை நினைத்த
பால் சொரியும் அந்த எருமையே பாலூட்டும் தாயாகிறது! அந்தப் பச்சை
தேரையே தாலாட்டும் வளர்ப்புத் தாய் ஆகிறது! இந்த விதமாய், பக்
திலே தாயில்லாத குறையை நிரப்பி விடுகின்றனவாம் தவளையும் எருமையு
இப்படித் துயிலும் அன்னக் குஞ்சு, காற்றில் அசையும் அந்தத் தாமன
பூம்பள்ளியில், ஆடும் தொட்டிலில் கண்வளரும் அருமந்த ராஜ குலத்
குழந்தை போல், கண்வளர்ந்து கொண்டிருக்கிறதாம்.

கோசல நாட்டிலே பகுத்தறிவு பெறாத பிராணி-உலகத்திலும், சகே
தர பாவமும் பரஸ்பர கைங்கரியமும் எவ்வளவு அழகாய் நிகழ்கின்றன! -
என்று கற்பனை செய்து, ஒரு லட்சிய சமுதாயத்தைக் குறிப்பாகக் காட்
கிறான் கவிஞன்.

"இப்படியும் ஒரு சமுதாயமா? 'ஊரார் பிள்ளையை ஊட்டி வளர்த்தா
தன் பிள்ளை தானே வளரும்!' என்ற அருமையான தமிழ்ப் பழமொழியி
புதைபொருள் இதுவோ?" என்று ஆச்சரியப்படுகிறார்கள் அந்தப் ப
டைக் கேட்கிறவர்கள்.

லட்சிய சமுதாயம் மனக் கண் முன் படிப்படியாக வளர்ந்து வருகிற
வயல் - பக்கங்களில் பெண்கள் தங்கள் தொழில் முடிந்ததும் ஆ
கொண்டே பாடுகிறார்கள். அந்தக் குரலோசை இடையர் இசைக்
புல்லாங் குழலோசையோடு ஒன்று பட்டு அந்த இடையர்களின் முற்
திலே கட்டியிருக்கும் கன்றுகளைத் தூங்கச் செய்கிறதாம். செம்பட
பெண்கள் பாடும் பாட்டு, தினைக் கொல்லை காக்கும் குறப் பெண்ண
தூங்கச் செய்து விடுகிறதாம். அதனால் தினைப்புனக் காவல் அழிந்து, க
களைக் கிளிகள் கொள்ளை கொண்டு இன்புறுகின்றனவாம். "என்
உறவு! என்ன ஒற்றுமை! என்ன சமுதாயம்!" என்று மறுபடியும் அ
யிக்கிறோம்.

தயிர் வளம்

அதோ பாருங்கள், அதே முற்றத்திலே, பாறைபோலத் தோ
திருக்கும் வெண்ணிறமான தயிரைக் கடைந்து கொண்டிருக்கும் பெ
களை! அவர்கள் பெரிய மத்தையிட்டுக் கடையும்போது, துள்ளி ஒலிக்
ஓசை வர வர அதிகமாய்க் கேட்கிறதல்லவா? அந்த ஓசையோடு அவர்
கைகளில் அணிந்துள்ள வளைகளின் ஓசையும் சேர்ந்து கொள்ளுகிறது.

16 தோயும் வெண்தயிர்
மத்தொலி துள்ளவும்,
11 ஆய வெள்வளை
வாய்விட்(டு) அரற்றவும்,
தேயும் நுண்ணிடை
சென்று வணங்கவும்,
ஆயர் மங்கையர்
அங்கை வருந்துவார்.

(பா. 59)
(59)


[தோயும் — (பக்குவமாக) உறைந்திருக்கும். வெள்வளை — வெண் ணிறமான சங்கு வளைகள். அரற்றவும் — கத்துவது போல் ஒலி செய் யவும். தேயும் — தேய்கிறதாகத் தோன்றும். நுண் — நுட்பமான. அங்கை — அழகிய கைகள்.]

என்ன வருத்தம்! என்ன இரக்கம்! கவிஞனே அவர்களைக் காதலிக் கிறானோ? — என்று தோன்றுகிறதல்லவா? ஆம்; "மலையாள மாதர்களை நான் காதலிக்கிறேன்!" என்று சொன்ன மகாத்மா காந்தியைப் போலத் தான். காதலர் கண்களை இசைத்துக் கொண்டே கவிஞன் பார்க்கிறான் அவர்களை.

மேலே சொன்ன ஓசைகளைக் கேட்டு அப்பெண்களுடைய காதலர்கள் அங்கே வருகிறார்கள் என்று ஊகிக்கலாம். அப் பெண்களின் இடைகள் ஊசலாடி முன்னே போய் வளைவதையும், கயிறுகொண்டு இழுத்து இழுத் துத் தயிர் கடைவதையும் அக்காதலர்கள் கண்டு, காதலும் இரக்கமும் ஒருங்கே கொள்கிறார்கள் என்றும் ஊகஞ் செய்யலாம்.

"ஐயோ! இந்த மெலிந்த இடை ஏன் இப்படி அடிக்கடி வணங்கி வருந்த வேண்டும்? இவர்களுடைய அழகிய கைகள்தான் ஏன் வருந்த வேண்டும்?" என்று காதலர்கள் கவலைப் படுவதாகவும் ஊகிக்கலாம். அந்தக் கை வளைகளும் அந்த வருத்தம் கண்டு இரங்குகின்றன என் றும், ஆனால் அவை தங்களைப் போல் சும்மா இராமல் வாய்விட்டுக் கதறு கின்றன என்றும் கூடக் காதலர்கள் எண்ணுகிறார்களாம். என்ன மாயம்! வளைக்கு வாய் உண்டா? ஏன் இல்லை? காதலர் - உலக மல்லவா? இக் காதல் - உலகமும் கவிஞன் தன் சோழவள நாட்டிலே கண்டதுதான்!

இத்தகைய காட்சிகளால் உருவாகும் லட்சிய சமுதாயத்தை முக்கிய மாக உருவாக்குவது பெண்களின் காதலே என்று கருதலாம். இயற்கையா கவே அகத் தூய்மை வாய்ந்த பெண்மணிகள், — அந்தத் தூய சிந்தையைத் தக்க அறிவுப் பயிற்சியால் பண்படுத்திக் கொண்டவர்கள், — தங்கள் 'பெருந் தடங்கண்'களால் ராம ராஜ்யம் என்ற அறப் பெருங் கோயிலையே உரு வாக்கி விடுகிறார்கள் — என்பது கம்பன் அளிக்கும் கற்பனைச் செல்வங் களில் ஒன்று.



பி. ஸ்ரீ.

9. "வண்மை இல்லை.........
உண்மை இல்லை!"

"அந்தச் சமுதாயத்திலே வண்மையும் இல்லை, உண்மையும் இல்லை!" என்று பிரசங்கிக்கிறான் கவிஞன். கேட்கிறவர்கள் பிரமித்துப் போகிறார்கள். "வலிமையும் இல்லை, போறிவும் இல்லை!" என்று வருணிக்கிறான். திடுக்கிட்டுப் போகிறார்கள், "அப்படியும் ஒரு லட்சியமா? சமுதாயமா?" என்று.

ராம ராஜ்யத்தின் தியாக சௌந்தரியத்தை வருணிக்க விரும்பியவன் தான்; சத்தியத்தையும் சக்தியையும், எல்லாவற்றுக்கும் அடிப்படையான ஞான சௌந்தரியத்தையும், வெளிப்படையாகக் காட்ட விரும்பியவன் தான்.

நாமுதல் படுவ, மெய்யும்
நாமநூல் - பொருளும் மன்றோ

[நாமுதல் — நாவிலே. படுவ — தங்குவன. நாம நூல் — பிரசித்தமான நூல்கள்.]

என்பது போன்ற வருணனைகளால் திருப்தி அடையாத உள்ளம் தியானத்திலே முழுகியது.

"இந்த நாட்டில் உள்ளவர்கள் நாவின் சிறந்த உபயோகத்தை அறிந்திருக்கிறார்கள்! உணவு வகைகளையும் சிற்றுண்டி வகைகளையும் ருசிபார்ப்பதும், வம்பளப்பதும் தானா நாவின் உபயோகம்? உண்மை உரைப்பதும், சிறந்த நூல்களைப் பயின்று அந்த அர்த்த விசேஷங்களைப் பிறரோடு பகிட்டுக்கொள்வதுமே நாவு படைத்த நற்பயன்" என்றெல்லாம் சொன்னாலும்

போதாதென்று தோன்றியது. "கையின் சிறந்த உபயோகம் கொ
தான்!" என்று சொன்னால்தான் போதுமா? இப்படியே அந்த நாட்டி
சக்தியைக் குறித்தும், அறிவுச் செல்வத்தைக் குறித்தும் வருணித்
கொண்டு போனால்தான் போதுமா?

கம்பன் தன் பகற் கனவிலிருந்து விழித்துக்கொண்டான், "க
டேன், கண்டேன்" என்று. அருகே ஆருயிர்த் தோழனான சடைய
பன் நின்று கொண்டிருந்தான். கவிஞன் வள்ளலை நோக்கிக் கொஞ்ச
குறும்பாகச் சிரித்துக்கொண்டு, "நான் கண்ட அந்த லட்சிய சமுதாய
திலே, அன்பா! உன்னைப்போன்ற வள்ளல்கள் இல்லை!" என்று சொல்
விட்டான்.

மேதாவியும் இல்லை!

வள்ளலும் இளநகை அரும்பி, "கவிஞனே! உன்னைப் போன்
மேதாவிகள் தானே ஒரு சமுதாயத்தைப் போஷிக்கும் உண்மையா
வள்ளல்கள்?" என்று கேட்டான். கம்பனோ, "அங்கே மேதாவி
இல்லை!" என்று தலை அசைத்துக்கொண்டே, பாடினான் அந்த அதிச
மான சமுதாயத்தை:

வண்மை இல்லை,ஓர்
வறுமை இன்மையால்;
திண்மை இல்லை,நேர்
செறுநர் இன்மையால்;
உண்மை இல்லை,பொய்
உரையி லாமையால்;
ஒண்மை இல்லை,பல்
கேள்வி ஓங்கலால்!

[ஓர் — ஒரு; (இங்கே) கொஞ்சமும். திண்மை — வலிமை. செ
செறுநர் — எதிர்த்துப் போர் செய்யும் பகைவர். ஒண்மை — (இங்கே
பேரறிவு.]

ஒரு புறவுக்காகத் தன் உடம்புச் சதையை அரிந்து கொடுத்த சிப
சக்கரவர்த்தி தோன்றிய ராஜ்யத்திலே 'வண்மை' இல்லையாம். அ
ராஜ்யமே லட்சிய சமுதாயம் ஆகும்போது வண்மையிருக்க முடியாது
என்கிறான். ஏன்? ஒரு கைக்குக் கீழே தாழ்ந்திருக்கும் தரித்தி
கைகள் இரண்டு என்பதை வெளியிடுவதுதானே வண்மை?

தரும புத்திரன், ஆயிரக் கணக்கான ஏழைகளுக்குச் சாப்பாடு போட
பின்பே தான் சாப்பிடுவதாகச் சொன்னானும் ஒரு சமயம், ஒரு பெ
வரிடம். அவரோ, "அட பாவி! அத்தனை ஏழைகளா உன்னுடை
ராஜ்யத்திலே? அதுவும் ஒரு ராஜ்யமா?" என்று வருந்தினாராம்,
வண்மையைக் குறித்து.

எவ்வளவோ 'திண்மை' அல்லது வலிமை வாய்ந்த பேரரசர்கள் தலைமுறை தலைமுறையாக வாழ்ந்து வந்த நாட்டிலே திண்மையும் இல்லாமல் போய் விடுமாம், அது ராம ராஜ்யம் என்ற லட்சிய பூமியாகும் போது. ஏன்? 'திண்மை' வாய்ந்த வல்லரசு எதிர்ப்பையும் பகைமையுணர்ச்சியையும் வெளிப்பட முடியாதபடி அடக்கிக் காட்டுவது தானே? பகையே இல்லை என்றால், கொலைக் கருவிகளோடு கூடிய வல்லரசு எதற்காக?

அரிச்சந்திரன் தோன்றிய நாட்டிலே உண்மையும் இல்லையாம். 'உண்மைக்கு ஒருவன்' என்று புகழப்பட்டான் அரிச்சந்திரன். அப்படியானால் பிறரெல்லாம் பொய்யர்களா? அப்படியே ஒருவனை மேதாவியென்று சுட்டிக் காட்டுவதற்கும், கல்வி கேள்வியற்ற பாமரர்கள் பலர் இருக்க வேண்டியதுதானே?

எனவே, கம்பன் கண்ட லட்சிய சமுதாயம் வேறு விதமாக அமைந்திருந்தது. அங்கே வறுமை இல்லாததால் வண்மையும் இல்லை; பகைவர் இல்லாததால் பராக்கிரமமும் இல்லை; பொய் இல்லாததால் உண்மையும் இல்லை. நாடெங்கும் கல்வி கேள்விகள் ஓங்கிக் கொண்டேயிருந்தன: ஆகவே அந்த நாட்டில் 'இவர் பண்டிதமணி, அவர் மகா வித்துவான்; இவர் மகாமகோபாத்தியாயர்; அவர் மேதாவி'' என்றெல்லாம் சுட்டிக் காட்ட முடியாது.

அழகு முதலான செல்வங்கள்

இந்த பாட்டைக் கேட்டவுடனே "இதுதான் மேதா விலாசம் (ஒண்மை)!" என்றான் சடையப்பன். ஸ்ரீரங்கநாதனுடைய சன்னிதானத்திலே கேட்டவர்களும் அப்படியே குதூகலம் அடைந்தார்கள். கம்பனும் குதூகலமாய்ப் பாடிக் கொண்டே போனான்:

18 கோதைகள் சொரிவன
குளிர் இள நறவம்;
பாதைகள் சொரிவன
பருமணி கனகம்;
ஊதைகள் சொரிவன
உயிர் உறும் அமுதம்;
காதைகள் சொரிவன
செவி நுகர் கனிகள். (க. 82)

[கோதை — பூமாலை. நறவம் — வாசனை. பாதை — (இங்கே) மரக்கலம். கனகம் — பொன். ஊதை — குளிர்ந்த காற்று. உறும் — மிகுகிற. காதை — கதை; பாட்டு.]

எதிர்மறையில் வருணித்தது போதும் என்று, வேறு விதமாகவும் வருணித்துப் பார்க்கிறான் கவிஞன், தான் கண்ட லட்சிய பூமியை. அந்த

நாட்டினருக்குப் பூமாலைகள் மீது ஒரே மோகம். அவர்கள் தங்களையும் வீடுகளையும் வீதிகளையும், பூமாலைகளாலும் பூம்பந்தல்களாலும் அழகு செய்து கொள்கிறார்கள் என்று ஊகிக்கலாம். அவர்கள் குளிர்ந்த இனி மணம் சொரியும் பூக்களை விரும்பினார்கள் என்பதே அவர்களது ரஸிகத் தன்மையை வெளியிடுகிறது.

அழகுச் செல்வத்திற்கு அடுத்தபடியாக அவர்கள் பொருட் செல்வத் தையும் போற்றுகிறார்கள். அயல் நாட்டுக் கப்பல்கள் இரத்தினங்களை யும் பொன்னையும் தமிழ் நாட்டிலே சொரிந்து விட்டு மிளகு முதலான விளை பொருள்களையும், ஆடை முதலியவற்றையும் வாங்கிக் கொண்டு போவதைக் கம்பனே சில துறைமுகங்களில் நேரில் பார்த்திருக்கவும் கூடும். தான் பார்த்ததையும் கேட்டதையும் கொண்டு, கோசல நாட்டாரும் ஏராளமான பொன்னையும் இரத்தினங்களையும் மரக்கலங்கள் மூலமாய்ப் பெற்றுக் கொண்டதாகக் கற்பனை செய்கிறான்.


அழகுச் செல்வத்தையும் பொருட் செல்வத்தையும் அனுபவிக்க ஆரோக்கியம் எவ்வளவு அவசியமானது! அந்த ஆரோக்கியத்தைக் கோசல நாட்டார் 'காற்று' என்ற வைத்தியனிட மிருந்தே நேரடியாகப் பெற்றுக் கொள்கிறார்களாம். 'உயிர் உறும் அமுதம்' — அதாவது, உயிர்த் தீயை மேலோங்கி ஜொலிக்கச் செய்யும் அமிர்தம் — என்று காற்றிலுள்ள ஜீவ சக்தியைக் குறிப்பிடுவது எவ்வளவு பொருத்தமானது!

"செவி நுகர் கனிகள்"

அழகு, செல்வம், ஆரோக்கியம் ஆகிய முப் பொருளையும் உள்ளபடி அனுபவித்துப் பயன்படுத்திக் கொள்வதற்கு அடிப்படை அறிவுச் செல்வமே யாகும். இந்த அறிவுச் செல்வம் கோசல நாட்டினருக்கு விசேஷமாகக் "கதை சொல்லும் தெய்வப் பாடல்"களின் வாயிலாகக் கிடைக்கிறதாம். அத்தகைய பாடல்களைச் 'செவி நுகர் கனி'கள் என்று கூறுவது எவ்வளவு ரஸமா யிருக்கிறது! செவியே வாயாக — 'செவியுள் நாவின் சுவை கொண்டு'—சுவைத்துச் சுவைத்து அனுபவிக்கத் தக்க கனிகளாம், கவிதை என்ற கல்பதரு நமக்குச் சொரிந்து தரும் கனிகள்.

இந்தச் 'செவி நுகர் கனி'களை ஆண்களோடு பெண்களும் 'சரி நிகர் சமான'மாக அனுபவித்து வருகிறார்கள் கோசல நாட்டிலே — கலை வளர்ப்புப் பண்ணைகளான கழகங்களிலே. அந்தக் கழகங்களில் ஒரு புறம் பெண்கள் கல்வி பயின்ற பின் ஓய்வு பெற்று ஓடியாடிப் பந்தடித்துக் கொண்டிருக்க, அதே சமயத்தில் ஆடவர்கள் கலைகளிலே ஈடுபட்டிருப்ப தும் உண்டு — என்கிறான் கவிஞன்.

இந்த லட்சிய சமுதாயத்தை ஆண்களோடு பெண்களும் 'சரி நிகர் சமானமாக' அமைத்து வருகிறார்கள் என்று கருதலாம். எனினும் வீர சுதந்திரமுள்ள சுந்தரிகளுக்கு இதில் விசேஷ ஸ்தானமுண்டு என்றும் ஊகிக்கலாம்.



சித்திர ராமாயணம்

பி. ஸ்ரீ.

10. பாலுடன் சுரந்த பாக்கியம்

"பொருள் பொங்குகிறது ; மக்களோ க்ஷீணித்துப் போகிறார்கள் !" என்று மேல் நாட்டுக் கவிஞன் ஒருவன் பிரலாபிக்கிறான். கம்பனோ ராம ராஜ்யத்திலே, "பொருளும் பொங்குகிறது பால்போல ; ஒழுக்கமும் பொங்குகிறது : எனவே மனிதனும் ஓங்குகிறான்" என்று பாடுகிறான் :

கலம்சு ரக்கும்
  நிதியம் ; கணக்கிலா
நிலம்சு ரக்கும்
  நிறைவளம் ; நன்மணி
பிலம்சு ரக்கும் :
  பெறுதற்(கு) அரியதம்
குலம்சு ரக்கும்
  ஒழுக்கம், குடிக்கெலாம்.

[கலம் — மரக்கலம் ; கப்பல். சுரக்கும் — பால் சுரப்பது போல் சொரிந்து கொடுக்கும். நிதியம் — பொன் முதலான பொருள் வகைகள். நன்மணி — நல்ல இரத்தினங்கள். பிலம் — சுரங்கம்.]

"மெய்த் திரு"

அந்த நாட்டினருக்கு நிதி, கப்பல் வியாபாரத்தின் மூலமாகவும், விவசாயத்தின் மூலமாகவும், சுரங்கங்களிலிருந்தும் கிடைக்கிறது. எனினும் நிலம் தந்த லட்சுமியைக் கடல் தந்த லட்சுமியைக் காட்டிலும் அதிகமாய்ப் போற்றுகிறார்கள் — என்று ஊகிக்கலாம். வியாபாரத்தைச் "கலம் சுரக்கும் நிதியம்" என்று சுருக்கக் கூறும் கவிஞன், விவசாயத்தைக் "கணக்கிலா நிலம் சுரக்கும் நிறை வளம்" என்று விசேஷித்துப் பேசுகிறானல்லவா? வயிற்றுப் பசிக்குத் தானிய மணிகளைச் சுரந்து கொடுக்கும் பூமித் தாய், சௌந்தரியப் பசிக்கும் "நன்மணி"கள் தருகிறாளாம்.

அந்த நாட்டு விவசாயிகள் "கடவுள் தந்த நிலம் பாழாய்க் கிடக்கலா காது!" என்று எண்ணுகிறவர்களைப்போல் கணக்கில்லாத நிலங்களைச் சாகுபடி செய்கிறார்கள். அந்தக் கணக்கில்லாத நிலங்கள் நிறைந்த வளத்துடனும் விளங்குகின்றன. பரந்த வளம் (Extensive Culture), நிறைந்த வளம் (Intensive Culture) என்ற இரண்டு அம்சங்களும் அந்தச் சாகுபடித் திட்டத்திலே காணப்படுகின்றன.

ஆனால் எல்லாவற்றுக்கும் மேலான செல்வம் ஒழுக்கம் தான். மற்ற நிதிகளோடு ஒழுக்கம் என்ற அழியாப் பெரு நிதியும் உள்ளவர்கள் இந்த நாட்டினர் — என்று அந்த ஒழுக்கத்தை முடிமணியாகவும் காட்டுகிறது இந்தப் பாட்டு.


"நன்மணி"யைச் சுரங்கம் சுரப்பதுபோல், "குலம் சுரக்கும் ஒழுக்கம்" என்கிறான். "குடிக்கெலாம்" என்று கூறி முடிப்பதால், 'எல்லாருக்கும் குலத்தைச் சுரக்கும் ஒழுக்கம்'— என்றே கருதுவதாய்க் கொள்ளலாம். "ஒழுக்கம் உடைமை குடிமை"—அதாவது, ஒழுக்கமே உயர் குலம் தருகிறது — என்றார் திருவள்ளுவர். அதற்கு வியாக்கியானம் தான்,

குலம்சு - ரக்கும்
ஒழுக்கம், குடிக்கெலாம்

என்று கம்பன் பாடுவதும்.

பக்தியே குலம் தரும் என்கிறார்கள் பக்தர்கள். குலம் அல்லது ஜாதியிலே பிறக்கிறார்கள் சாமானியர்கள் என்றால், பக்தர்களுக்குக் குலம் பிறக்கிறதாம். ஒழுக்கம் தந்த உயர்குலத்தைக் கம்பனும் "பெறுதற்கு அரிய" குலம் என்று சிறப்பிக்கிறான்.

ராம ராஜ்ய வாசிகள் ஒழுக்க வளர்ச்சிக்குச் சாதகமாகவே பொருள்களையும் பெருக்கிக் கொள்கிறார்கள் என்று ஊகிக்கலாம். குற்றம் செய்யாமலே வியாபாரம் செய்யலாம்; நிலத்தைப் பண் படுத்தும்போதே மனத்தையும் செம்மையாகப் பண் படுத்திக்கொண்டே போகலாம் — என்பதை



மெய்ப்பிக்கிறார்கள். சுரங்கத்திலிருந்து நன்மணிகளைத் தோண்டி எடுப்பது போல், உள்ளத்திலிருந்தும் தோண்டத் தோண்டச் சுரக்கும் சக்திப் புதையல் எடுத்து, அவ்வளவு சக்தியையும் பண்பாட்டையும், அவ்வளவு செல்வத்தையும் செல்வாக்கையும் நல்வழிப் படுத்துகிறார்களாம்.

இப்படி ஒழுக்கத்தோடு ஒக்கும் பொருளை "மெய்த் திரு" என்கிறான் கம்பன். வலிமையால் பிறரை ஹிம்ஸிக்கும் இரக்கமில்லாத அரக்கர்கள் ராவண ராஜ்யத்திலே குவித்து வைக்கும் கோடிக் கணக்கான பொருளையும் "பொய்த் திரு" என்கிறான். உண்மையில், "மெய்த்திரு"வே திரு அல்லது லட்சுமியின் அருளால் வரும் பொருள்; "பொய்த் திரு" பொருள் அன்று; இருள்தான்!



நல்வழியிலே வந்து நல்வழியிலே செல்லும் செல்வ மாகிய "மெய்த் திரு"வை—"வெல்த்" (Wealth) என்று அங்கீகரிக்கிறார் ஐரோப்பியப் பேரறிஞர் ஒருவரும். அப்பெரியார் "இல்த்" ("Illth") என்ற ஒரு புதிய பதத்தையும் படைத்து விட்டிருக்கிறார்,—மேல்நாடுகளிலே முதலாளி வர்க்க நாகரிகம் (ஏழைகளையும் பிற நாடுகளையும் சுரண்டிக்) குவிக்கும் பெருஞ் செல்வத்தைக் குறிப்பிடுவதற்கு. நல்லது : மேற்கும் கிழக்கும் சந்திக்கத்தான் செய்கின்றன! பூகோள சாஸ்திரத்தில் மட்டுமா? பெரியார் உள்ளங்களிலும் கூட.

இனி, ஒழுக்கத்தோடு ஒக்கும் "மெய்த் திரு" நிறைந்த கோசல நாட்டிலே, குற்றம் இல்லை; எனவே "கூற்றம்" அல்லது அகால மரணமும் இல்லையாம். குற்றம் எப்படி நிகழ முடியும், சிந்தை அவ்வளவு செம்மையாகப் பண்பட்டிருக்கும்போது?

கவிஞன் பாடுகிறான் :

கூற்றம் இல்லை,ஓர்
குற்றம்இ லாமையால் ;
சீற்றம் இல்லை,தம்
சிந்தையில் செம்மையால் :
ஆற்ற நல்லறம்
அல்ல(து) இலாமையால்,
ஏற்றம் அல்ல(து)
இழித்தக(வு) இல்லையே.

[சீற்றம்—(சீறுகிற) கோபம். சிந்தையில் செம்மை—மனப் பண்பு; பண்பாடு. ஆற்ற—செய்ய. ஏற்றம்—முன்னேற்றம். இழித்தகவு—இழிவு.]

மனிதனை மனிதன் சீறிப் பார்க்கும் அந்தக் குற்றம் கூட ஏற்படுவதில்லையாம். அத்தகைய மனப் பண்பு ராம ராஜ்யத்திலே. அந்த மன அமைதியே—அந்தப் பண்பாடே—அவர்களுடைய நீண்ட ஆயுளுக்கும் ஒரு முக்கிய காரணம். அப்படி நீண்டு கொண்டிருக்கும் ஆயுளை அவர்கள் நல்லறப் பணிகளுக்கே அர்ப்பணம் செய்து விடுகிறார்களாம்.

ஆம் : அவர்கள் சிந்தையில் செம்மையோடு, செயலிலும் திறமை வாய்ந்தவர்கள். செய்வதற்கோ நல்ல அறச் செயல்கள் தவிர, வேறொன்றுக்கும் அவசியமே கிடையாது. அப்படி நடக்கிறது ராஜ்யம். எனவே, நாடு முன்னேறிக் கொண்டே யிருக்கிறது.

எல்லாம் அழகு மயம்

அந்த நாட்டினர் அறத்திலும் முன்னேறுகிறார்கள்; நீதியிலும் முன்னேறுகிறார்கள்; அறிவிலும் முன்னேறுகிறார்கள். (எது நீதி? எது அறம்? — என்று நிச்சயிப்பதற்கே அறிவு வேண்டுமல்லவா?) இதய பண்பாகிய அன்பிலும் முன்னேறுகிறார்களாம்; அழகிலும் முன்னேறுகிறார்களாம்.

என்ன? உருவ அழகிலுமா? அறத்தைப் போல், நீதியைப் போல், நிலையும் அன்பையும் போல், அழகும் அவ்வளவு அவசியமா? கேளுங்கள் கம்பன் பாடுவதை :

21 பொற்பில் நின்றன
    பொலிவு ; பொய்யிலா
நிற்பில் நின்றன
    நீதி ; மாதரார் 21
அற்பில் நின்றன
    அறங்கள். (90) (கோ. 90)

[பொற்பு—(இங்கே) உள்ளத்தின் அழகு. பொலிவு—உருவ அழகு. நிற்பு—நிலை. மாதரார்—மாதர்கள். அற்பு—அன்பு.]

சௌந்தரிய உணர்ச்சியுள்ள கோசல நாட்டினர் ரூப சௌந்தரியத்தை ம் நிதியாக—ஒரு பாக்கியமாக—மதிக்கிறார்கள். ஆனால் (குண சௌந்தரியமும் ஞான சௌந்தரியமும் ஆகிய) அக அழகிலே வேரூன்றி வளர்ந்தோங்கும் அழகைத்தான் அழகாகப் போற்றுகிறார்களாம். அவர்களுக்கு அறிவு, அறப் பற்று, நீதியுணர்வு, அன்பு — எல்லாம் அழகுதான்! இவை யெல்லாம் அக அழகு: இந்த அக அழகிலிருந்து தழைத்துப் படர்ந்து புற அழகு — ரூப சம்பத்து.

அவர்களுக்கு அழகும் உள்ளத்திலிருந்து பொங்குவதுதான்; நீதியு(ம்) உள்ளத்தின் தன்மையாகிய உண்மையிலிருந்து சுரப்பதுதான்; அறமு(ம்) அன்பிலிருந்து தழைப்பது தான்—என்கிறான் கவிஞன். ராம ராஜ்ய(த்)திலே எல்லாம் அன்பு மயம்; எல்லாம் அழகு மயம்.

நீதிபரிபாலனம் சட்டங்களில் இல்லை; சத்தியத்திலேதான் நிலைபெற்(று) நிற்க முடியும்—என்பதும் சிந்திக்கத் தக்கது. அந்த நிலையைப் "பொய்யில் நிற்பு"—அதாவது, பொய்யின்மை அல்லது சத்தியத்திலே (ஆக்கிரகத்(து)டன்) நிற்பது—என்று குறிப்பிடுவதும் சிந்தை செய்யத் தக்கது.

அன்பிலிருந்து வளரும் அறம், சிறப்பாக மாதர்களின் அன்பிலே தான் நிலைபெற்று வளர்கிறது—என்கிறான். கோசலம் என்ற அற(ப்) பெருங் கோயிலின் அஸ்திவாரமே அந்த நாட்டுத் தாய்க் குலத்தின் ஆழ்ந்(த) அகன்ற பேரன்பிலே நிலை பெற்றிருக்கிறது—என்று ஊகிக்கலாம். அந்(த) அன்பிலேதான் எவ்வளவு தியாக சக்தி புதைந்து கிடக்கிறது!

குழந்தைக்குப் பாலூட்டும் தாயன்பு, அந்தப் பாலோடு ஞானப் பாலை யும் உயர்ந்த லட்சியங்களையும் ஊட்டி விடும் அபார சக்தி வாய்ந்தது. அது தெய்விக அன்பு. தாய், உயிர்களை யெல்லாம் ஊட்டி வளர்க்கும் பராசக்தி யாகிய லோக மாதாவின்—தாய் நாட்டின்—பிரதி பிம்பம்.

கலைக் கழகங்களிலே கலைப் பயிற்சிக்குப் பின் பந்து விளையாடி(க்) கொண்டிருந்த அதே கைதான், இப்போது வெண்ணிலாவில் குவிந்திருக்கு(ம்) தாமரை போலக் குவிந்து, மெள்ளத் தலையை அணைத்துக் கொண்டு குழ(ந்)தைக்குப் பாலூட்ட உதவுகிறது. அந்தத் தாயைக் காட்டுகிறான் கவிஞன் "அதோ பாருங்கள்!" என்று:

தாலி ஐம்படை
　　தழுவு மார்பிடை
மாலை வாயமு(து)
　　ஒழுகு மக்களைப்
பாலின் ஊட்டுவார்
　　செங்கை, பங்கயம்
வானி லாவுறக்
　　குவிவ மானுமே.

[தாலி ஐம்படை — ஐம்படைத் தாலி; விஷ்ணுவின் பஞ்சாயுத(ம்) வடிவமாக அமைத்துப் பிள்ளைகளுக்கு ரட்சையாக அணியும் ஆபரணம். மாலை — ஒழுங்கு. பங்கயம் — தாமரை. வானிலா — வானத்திலிருந்து வீசும் வெண்ணிலா. மானும் — ஒத்திருக்கும்.]

வானத்து வெண்ணிலவு போலவே அந்தத் தாய்மார் அகத்திலும் முகத்திலும் இன்ப அன்பு வீசுகிறது; தியாக ஒளி வீசுகிறது. இத்தகைய சௌபாக்கியவதிகளே ஒரு ராஜ்யத்தின் உண்மையான நிதி, — உண்மை யான சக்தி. ராமராஜ்யமும் இவர்களுடைய பாக்கியம் தான்.